உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 35 | இராக்ஷச – தை – 10—2—76 | இதழ் 3

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## சிவராத்திரி விரதச் சிறப்பு

ஏனைய சமயக் கோட்பாடுகளெல்லாம் ஒவ்வோர் அங்கங்களாகத் திகழ அவற்றின் மணிமுடியாக விளங்கும் பெருமை மிக்கது சைவ சமயம். இதுபற்றியே தாயுமானுர் " மயல் அறு மந்திரஞ் சிட்சை சோதிடாதி மற்றங்க நூல்வணங்க மௌன மோலி அயர்வறச் சென்னியில் வைத்து இராசாங்கத்தில் அமர்ந்தது வைதிக சைவம்" என்று குறித்தார். " சைவத்தின் மேற்சமயம் வேறிலை அதிற்சார் சிவமாம் தெய்வத்தின் மேல்தெய்வம் இல்லெனும் நான்மறை" என்பது பல சமயங்களையும் நுணுகி ஆய்ந்தவர் கண்ட முடிபு. சிவபெருமானே முழுமுதற் கடவுள். அப்பெருமானின் திருவருட் சிறப்பினை விளக்கும் நெறியே சைவம்; அந்நெறி நிற்போரே சைவர்.

பற்றறுத்து சிவபெருமானின் திருவடியில் இளைதலே வீடுபேருகும். இவ்விடுபேற்றினை அடைதற்குரிய நெறிகள் பலவாகும். அவற்றுள் விரத நெறி ஒன்று. எனவேதான் நம் மூன்னோர், காப்பது விரதம் என்றனர். எதனைக் காப்பது? புலன்கள் பொறிகளின் வழியே தீயநெறிகளிற் செல்லாமல் காப்பதே விரதமாகும். இதனையேதான்;

"சென்ற இடத்தாற் செலவிடா தீதொரீ இ
நன்றின்பால் உய்ப்பது அறிவு"

என்று திருவள்ளுவரும் அருளினர். உலகநாதரும், "மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என்று கூறியிருப்பதும் சிந்திக்கத்தக்கது. மனம் புலன்களோடுவைத்து எண்ணப்படாவிட்டாலும் அந்தக்கரணங்களுள் ஒன்று என்று அறிக. புலன்களையும் மனம் முதலிய அந்தக்கரணங்களையும் ஒரு நெறிப்படுத்திக் காப்பது விரதத்தின் நோக்கமாகும். இப்படிக் காப்பதால் உயிர் நாளுக்குநாள் உயர்வடைந்து இறை நெறியில் ஈடுபட்டு உய்திபெறுகிறது. புலன்களையும் மனம் முதலிய அந்தக்கரணங்களையும் ஒருநெறிப்படுத்துவதற்கு உணவினைக் குறைத்துக் கொள்ளவேண்டும். புதிதாக விரதம் தொடங்குகின்றவர் படிமுறையில் உணவினைக் குறைத்துப் பழம் முதலியவற்றைப் பயன்படுத்தியும் பால் முதலிய சத்துணவைப் பருகியும் பழகிக் கொள்ளவேண்டும். இம்மாதிரி மேற்கொண்டிருக்கின்ற செயல் முறைகளை – இலட்சியங்களை – குறிக்கோளைக் காப்பது விரதமாகும்.

எந்தச் செயலும் இறையருளால் நிகழ்வதால் தெய்வங்களை முன்னிட்டு நம் நாட்டில் விரதங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்விரதங்களுக்கெல்லாம் தலைசிறந்த விரதம் சிவ விரதம். அவ்விரதங்களுள்ளும் தலையாயது சிவராத்திரி விரதமேயாகும்.

சிவபெருமான் அடியவர்களை உய்விக்கும் பொருட்டு மேற்கொண்டருளும் திருவுருவங்களை மூன்ருகக்குறிப்பர். அருவம், (கட்புலனுக்குத்தோன்ருதது). உருவம், (விநாயகர், சோமாஸ்கந்தர் போன்ற திருவுருவங்கள்). அருவுருவம், (இலிங்கத் திருமேனி) என்பனவே அவை. சிவலிங்கத் திருமேனியை அருவுருவத் திருமேனி என்பர் ஆன்ரோர். பிரமதேவனுக்கும் விட்டுணுமூர்த்திக்கும் அருள்பாலிப்பதற்காகச் சிவபெருமான் இலிங்கத் திருமேனி கொண்டனர். இத்திருமேனியை அவர் கொண்டகாலமே சிவராத்திரி. இவ் வரலாற்றை இலிங்க புராணத்துள் விரிவாகக்காணலாம்.

சைவப் பெருமக்கள் மேற்கொண்டு ஒழுகும் இச்சிவராத்திரியினை ஐந்து வகையாகப் பகுத்துள்ளனர். அவை :- 1. நித்திய சிவராத்திரி. 2. பட்ச சிவராத்திரி. 3. மாத சிவராத்திரி. 4. யோக சிவராத்திரி. 5. மகா சிவராத்திரி என்பனவாகும்.

அமாவாசை அல்லது பௌர்ணமியிலிருந்து பதினான்காம் நாளாகிய சதுர்த்தசி நாட்கள் ஆண்டொன்றுக்கு இருபத்து நான்கு முறைவரும். இவ்விருபத்துநான்கு நாட்களிலும் சிவபூசை செய்து வழிபடுதல் நித்திய சிவராத்திரி எனப்படும்.

தைமாதத்தில் பௌர்ணமியை அடுத்த முதல்நாளில் இருந்து தொடர்ந்து பதின்மூன்று நாட்கள் சிவபூசைசெய்து வழிபடுவது பட்ச சிவராத்திரி என்று கூறப்படும்.

தேய்பிறைச் சதுர்த்தசி நாட்கள் பன்னிரண்டும் மாத சிவராத்திரியாகும்.

யோக சிவராத்திரி :- சோமவாரம் சூர்ய உதயம் முதல் 10 நாழிகை வரை சதுர்த்தசி இருக்குமாயின், அது யோக சிவராத்திரியாகும்.

மாசிமாதம் தேய்பிறையில் பதினான்காம்நாள் ( சதுர்த்தசி ) நள்ளிரவே சிவபெருமான் சிவலிங்கத்திருமேனிகொண்டருளிய புண்ணிய காலமாகும். இதுவே மகா சிவராத்திரி என்று சைவர்களால் கொண்டாடப்படுகிறது. பகல்முழுவதும் திரயோதசி; இரவுமுழுவதும் சதுர்த்தசி கூடுவது உத்தமம் என்றும், திரயோதசி சிறிதும் சேராவிடின் மத்திமம் என்றும், அமாவாசை சேர்வது அதமம் என்றும் கொள்வது ஆகம விதியாக இருந்து வருகிறது. திரயோதசி – சக்தி அம்சம், சதுர்த்தசி – சிவாம்சம்.

சிவராத்திரி அன்று இரவில் பதினைந்து நாழிகைக்கு மேல் இரண்டு நாழிகை உள்ள காலமே சிவபெருமான் இலிங்கத் திருமேனிகொண்ட காலம் ( 12 மணி முதல் 1 மணி வரை ) என்று சொல்லப்படுகிறது. சிவராத்திரி அன்று இரவு நான்கு சாமங்களிலும் ஆன்மார்த்த பூசை ( தன்பொருட்டுச் செய்வது ) பரார்த்த பூசை ( பொது நலங்குறித்துச் செய்வது ) சிறப்பாகச் செய்வது சைவர்கள் கடமை. இயலாதவர்கள் மேற்குறித்த இலிங்கோற்பத்திக்காலத்தில் மட்டுமாவது சிவபூசை புரிதல்வேண்டும். உண்ணாமை, உறங்காமை, சிவவழிபாடு சிவாலய தரிசனம் என்பன சிவராத்திரி விரதத்தில் இன்றியமையாது மேற்கொள்ளத்தக்கன.

சிவராத்திரி பூசை செய்து பயன் பெற்றோர் வரலாறுகள் பலவற்றைக் கந்தபுராணமும், இலிங்கபுராணமும் விளக்குகின்றன.

வேட்டையாடக் காட்டுக்குச் சென்றான் ஒருவேடன். பகல் முழுதும் வேட்டைக்கு விலங்கு ஏதும் கிடைக்கவில்லை. இரவு வந்தது. ஒரு குளக்கரையை அடைந்தான். கரையில் ஒரு வில்வமரம்; கீழே ஓர் சிவலிங்கத் திருமேனி. புலிவரும் என்று அஞ்சி வில்வமரத்தின்மேல் ஏறினான் வேடன். இரவெல்லாம் உறக்கம் வராதிருக்க வில்வ இதழ்களை ஒன்றொன்றாகப் பறித்துக் கீழே போட்டவண்ணம் இருந்தான். இரவு உணவும் இல்லை. அன்று சிவராத்திரி. தற்செயலாக அவனுக்கு உண்ணாநோன்பு, சிவபூசை, கண்விழிப்பு முதலியன அமைந்தன. அவன் இறுதிக் காலத்தில் ஏமபயமின்றி உய்ந்தான். சிவபெருமானே அவனுக்குச் சிவராத்திரி விரதச் சிறப்பை உபதேசித்தார். இதனைக் கந்தபுராணம் கூறுகிறது. அறியாமல் செய்த பூசைக்கே பயன் விளையுமானால் அறிந்து நியமமாகச் சிவராத்திரி விரதம் மேற்கொண்டு சிவபூசைபுரிந்தால் விளையும்பெரும்பயனைச்சொல்லவும் வேண்டுமோ?

பக்தியோடு பதினான்காண்டுசிவராத்திரிவிரதம் அனுட்டித்து பதினான்காம் ஆண்டில் பொன்னாலோ, வெள்ளியாலோ சிவலிங்க வடிவம் செய்து பூசித்து அதனைத் தானமாக வழங்குவோர்க்கு வீடுபேறு சித்திக்கும் என்பது புராண முடிபு.

பலவேறு மலர்களைக் கொண்டு பூசித்தாலும், சிவராத்திரி அன்று, 'சிவகரந்தையால் அருச்சிப்பது சிறப்பாகக் கொள்ளப் படும்.

சிவபூசை மேற்கொண்டவர்கள் சிவராத்திரி அன்று இரவு நான்குயாமமும் சிவபூசை செய்தல்வேண்டும். ஏனையோர் பிறர் நிகழ்த்தும் சிவபூசைக்கு வேண்டுவன உதவி அதனைத் தரிசித்தலும், சிவாலய தரிசனம் செய்தலும் நன்று.

இப்புனிதமான சிவராத்திரித் திருநாளில் சைவ அன்பர்கள் சைவாதீன குருமகாசந்நிதானங்கள் சிவாசாரியப் பெருமக்கள் மற்றும் தீட்சை செய்வித்தற்குரிய ஆசாரியப் பெருமக்களிடம் சிவதீட்சை பெற்று நியமமாக அனுட்டானங்கள் மேற்கொள்ளுதலும், சிவபூசை எழுந்தருளப்பண்ணிக்கொள்ளுதலும் பெரிதும் பயன் நல்கும் நெறியாகும்.

இவ்வாண்டு சிவராத்திரித் திருநாள் மாசித்திங்கள் 16 ஆம் நாள் சனிக்கிழமை (28—2—76) அன்று அமைகிறது. சைவப் பெருமக்கள் அனைவரும் சிவராத்திரிவிரதத்தினை நியமமாக மேற்கொண்டு உளத்தூய்மையோடு சிவபூசை செய்தும், சிவாலய தரிசனம் நிகழ்த்தியும், சிவபெருமானின் பரிபூரண அருளைப் பெற்று உய்வார்களாக.

## வேளூரில் தைச்செவ்வாய் திருவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் தைச் செவ்வாய்த் திருவிழா 1—2—76 ஞாயிற்றுக்கிழமை முதல் தொடங்கி தைமாதக்கடைசிச்செவ்வாய்க்கிழமையாகிய 10—2—76 அன்று நிறைவுற்றது. 1—2—76 அன்று ஸ்ரீ செல்வமுத்துக் குமாரசுவாமி மயூர (மயில்) ஆவஜாரோகணமும், 5—2—76 அன்று இரவு சகோபுரத்தில் வெள்ளி மயில் வாகனக் காட்சியும், 8—2—76 அன்று திருத்தேர்த் திருவிழாவும், 9—2—76 அன்று கிருத்திகை நக்ஷத்திரமாதலின் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் 10—2—76 அன்று சித்தாமிர்த தீர்த்தத்தில் ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசுவாமி தீர்த்தங்கொடுத்தருளலும், கொடியிறக்கமும் நிகழ்ந்தன. விழா நாட்களில் மாலையில் சமய விரிவுரைகள் நிகழ்ந்தன. 3—2—76 அன்று தருமையாதீனத் தமிழ்ப் புலவர், மகாவித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களும், 4—2—76 அன்று வித்துவான், திரு. வை. மு. முருகையா தேசிகர் அவர்களும். 5—2—76 அன்று தருமையாதீனத் தமிழ்ப் புலவர், திரு. வி, சா. குருசாமி தேசிகர் அவர்களும், 6—2—76 அன்று தருமையாதீனத் தமிழ்ப் புலவர், டாக்டர். திரு சொ சிங்காரவேலன் எம்.ஏ., பி. எச்டி., அவர்களும், 7—2—76தருமையாதீனத் தமிழ்ப் புலவர், சிரோமணி, வித்துவான், திரு. வி. சபேசன் அவர்களும் முறையே திருப்புகழ், கந்தரனுபூதி, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், திருமுருகாற்றுப்படை, கந்தாலங்காரம் என்ற தலைப்புக்களில் விரிவுரையாற்றினர்கள் அன்பர்கள் பலர் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமியை வழிபட்டும் விரிவுரைகளைக் கேட்டும் மகிழ்ந்தனர்.

உ

குருபாதம்

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

திருமந்திரம் பற்றி

வழங்கிய

# அருளுரை.*

" வம்பறு வரிவண்டு மணம்நாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கர்க்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. "

## சிவநெறிக்கு வழிகாட்டியோர் :

சிவநெறிக் கொள்கை நடைமுறைக்கு ஒவ்வாதது அல்ல; ஒத்ததே என்பதனை நமது பழம் பெரும் தமிழகத்திலே நிலை நாட்டிக் காட்டிய பெரியவர்கள்தான் அறுபத்துமூன்று நாயன்மார்கள். அறுபத்துமூன்று நாயன்மார்களும் அறுபத்துமூன்று வகையாக வாழ்ந்தவர்கள். ஆனால், அவர்களுடைய வாழ்வை லட்சக்கணக்கான – கோடிக்கணக்கான மக்கள் அனைவரும் ஏதாவது ஒரு நெறியிலே பின்பற்றித் தகுதியுடையவர்களே என்பதை இன்றும் நாம் எண்ணிப்பார்த்தால் ஏற்றுக்கொள்ள முடியும்.

அறுபத்துமூன்று துறைகளிலே வாழ்ந்துகாட்டிய பெரியவர்கள் அறுபத்துமூன்று நாயன்மார்கள். அவர்கள் வாழ்ந்து

---

*22—11—75 அன்று திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்திலிருந்து இலக்கியச் சோலைப் பகுதியில் ஒலிபரப்பப் பெற்றதைத் தழுவியது.

காட்டிய அந்தத் துறைகளிலே நம்முடைய வாழ்க்கையை ஏதேனும் ஒன்றில் அமைத்துக்கொள்ள இயலும். அவர்களை நமக்கு அறிமுகப்படுத்தியவர் சமய குரவர்களிலே ஒருவராகிய சுந்தர மூர்த்தி சுவாமிகள். அவர் "திருத்தொண்டத்தொகை" என்ற பதினொரு பாடல்களால் அறுபத்துமூன்று நாயன்மார்களையும் நமக்கு ஒருவரி இரண்டுவரிகளிலே அறிமுகப்படுத்தியிருக்கிறார். அவர்களது வரலாற்றைத் தொகுத்துச் சொல்லியதனாலே அதற்குத் "திருத்தொண்டத் தொகை" என்று பெயர். அதனை, திருத்தொண்டர் திருவந்தாதி என்ற நூல்மூலம் வகைப்படுத்திச் சொன்னார் நம்பியாண்டார்நம்பிகள்.

## தமிழ் வியாசர் :

இந்த இரண்டையும் துணையாக வைத்துக்கொண்டுதான் சேக்கிழார் பெருமான் கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் பெரிய புராணம் என்ற விரிநூலை இயற்றி நாயன்மார்களுடைய வரலாற்றை மிகத் தெளிவாகவும், விரிவாகவும், சுவைபடவும் எழுதிக் கொடுத்திருக்கிறார். வடமொழி வேதத்தை வகுத்துக்கொடுத்த வியாசரைப்போல, தமிழ் வேதமாகிய திருமுறைகளை வகுத்துக் கொடுத்த காரணத்தால் நம்பியாண்டார்நம்பிகளைத் தமிழ் வேத நெறிக்கு வியாசராகக்கொள்வர் சைவச் சான்றோர்.

## எம்பிரான் - நம்பிரான் :

அறுபத்துமூன்று நாயன்மார்களில்ஒருவராகிய திருமூலதேவ நாயனாரைத்தான் இப்பொழுது நாம் சிந்திக்க இருக்கிறோம். அவர் அருளிச்செய்ததுதான் திருமந்திரம். திருமந்திரம் என்ற நூலைத் தெரிந்துகொள்ளுவதற்கு முன்பாக, அவ்வருள் நூலை இயற்றிய ஆசிரியரின் பெருமையை உணர்ந்தால்தான் நூலின் பெருமை நமக்குச் சுவையாக அமையும். எனவே, அவருடைய வரலாற்றை ஒரு சிறிது நாம் சிந்திக்கவேண்டும். சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

"நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்"

என்று சொல்கிறார். அவர் அறுபத்துமூன்று நாயன்மார்களில், 'நம்பிரான்' என்று குறிப்பிடுவது திருமூலர் ஒருவரைத்தான். திருஞானசம்பந்தரை 'எம்பிரான்' என்று குறிப்பிடுகின்றார். 'பிரான்' என்றால் தலைவன் என்பது பொருள். சைவத்திற்குத் தலைவராவார் இவ்விருவருமே என்ற கருத்தை நமக்குத் தெளிவு

படுத்திக் கூறியிருக்கிறர் என்றே தோன்றுகிறது. திருஞான சம்பந்தர் நம்முடைய சைவ நெறியை நிலை நிறுத்திய பெருமைக் குரியவரானதால் அவரை 'எம்பிரான்' என்று சொன்னர். திருமூலதேவ நாயனர் எதை நிலைநிறுத்தினர் என்றல் வேத ஆகமக் கருத்துக்களை நிலைநிறுத்தினர். அவற்றை மக்கள் உள்ளங்கொள்ளுமாறு தமிழால் மூவாயிரம் பாடல்களாலே நமக்கு அறிவித்து நிலைநிறுத்தினர். அத்தகு பெருமைக்குரியவர் திருமூலர். அதுமட்டுமில்லாமல் கயிலையில் இருக்கின்ற பரமே சுவரனிடத்தில் உபதேசம் பெற்றவர் நந்தியெம்பெருமான். நந்தியெம்பெருமானிடத்திலே நேரிடையாக உபதேசம் பெற்ற பெருமைக்குரியவர் திருமூலர். ஆதலால் இவரையும் 'பிரான்' என்று குறிப்பிடுகிறர்.

## திருக்கயிலையில் :

திருமந்திரத்தை அருளிச்செய்த திருமூலரது வரலாறு சில அரிய பெரிய உண்மைகளை மெய்ப்பிப்பது. சுந்தரரது வரலாறு பூவுலகில் உள்ளவர்கள் கயிலை செல்வதை விளக்குகின்றது. திருமூலரது வரலாறு கயிலையில் உள்ள பெரியவர்கள் பூவுல கிற்கு வருதலை விளக்குகின்றது. திருமூலர் கயிலையிலிருந்து இங்கு எழுந்தருளினர் என்பதை அவரே கீழ்வரும் பாடலில் குறிக்கிறர்.

" விளக்கிற் பரமாகும் மெய்ஞ்ஞானச் சோதி
அளப்பில் பெருமையன் ஆனந்த நந்தி ;
துளக்கும் ஆனந்தக் கூத்தன்சொற் போந்து
வளப்பில் கயிலை வழியில்வந் தேனே "

இதனைக்கொண்டே சேக்கிழார்,

" கொற்றவனர் திருக்கயிலை மலைநின்றும் குறுமுனிபால்
உற்றதொரு கேண்மையினல் உடன்சிலநாள் உறைவதற்கு
நற்றமிழின் பொதியமலை நண்ணுதற்கு வழிக்கொண்டார் "

என அருளிச்செய்தார். எனவே, திருமூலர் திருக்கயிலையில் உறைபவராயிருந்து, அகத்திய முனிவரோடு முன்பே தமக்கு உள்ள நட்புக்காரணமாக அவரோடு சிலநாள் தங்கியிருக்க விரும்பி நிலவுலகிற்குவந்து பொதியமலை நோக்கி யாத்திரை செய்தார்.

திருவடி தீக்ஷை :

திருமூலர் திருக்கயிலையில் உள்ள பல முனிவர்களில் ஒருவராக மட்டும் இருந்துவிடாமல், ஞானவேட்கை உடையவராய் நந்திதேவரை அடைந்து வேண்டி, அவரால் திருவடி தீட்சை செய்யப்பெற்றுச் சிவஞானத்தை அடைந்து விளங்கினர் என்பதையும் அவரது மற்றொரு பாடல் இனிது விளக்குகின்றது. திருவடி என்பது எல்லோருக்கும் இரண்டு பாதம் உண்டு. அந்த இரண்டு பாதங்களில் ஒன்று ஞானம்; ஒன்றுகிரியை; அதாவது, தமிழிலே சொன்னால் ஒன்று அறிவு; ஒன்று செயல். அறிவு செயல் என்ற இரண்டும் இன்றி உலகம் இயங்காது. மின்சாரத்திலே எடுத்துக்கொண்டாலும் கூட 'NEGATIVE' 'POSITIVE' (தாங்கும் சக்தி, பாயும் சக்தி) என்று இரண்டு சொல்லுகிறோம். அதனாலே, ஒன்று செயல்படும். ஒன்று செயல்படுவதற்கு அறிவாகத் துணை செய்யும். இந்த இரண்டையும் தான் ஆண்டவனுடைய திருவடியாக நாம் சொல்லுகிறோம். அகிலே, வலது பாதம் அறிவு; சிவன்: இடது பாதம் செயல் சக்தி. அதாவது அம்மை அப்பர்; இச்சிவசக்தி உணர்வை இறைவன் அல்லது ஆசாரியன் தன் திருவடிகளை மாணவன் சிரசில் வைத்து உணர்த்துவதே திருவடிதீட்சை எனப்பெறும்.

"பெற்றமும் மானும் மழுவும் பிரிவற்ற
தற்பரன் கற்பனை யாகும் சராசரத்து
அற்றமும் நல்கி, அடியேன் சிரத்தினில்
நற்பத மும்அளித் தான்எங்கள் நந்தியே"

என்ற திருமந்திரப்பாடலாலும் திருவடி தீட்சையின் பெருமையை உணரலாம். "திருவடி என் தலைமேல் வைத்தார் நல்லூர் எம் பெருமானர் நல்லவாறே" என இத்திருவடி தீட்சையை அப்பர் சுவாமிகளும் கூறியிருத்தல் காணலாம். திருவடிகளை, ஏன் தலையிலே சூட்டவேண்டுமென்றால், நம் எண்சாண் உடம்பிற்குத் தலைநகரம்போல் விளங்குவது தலைதான். ஆகவே, அறிவுக் கருவி இருக்கக்கூடிய இடத்திலேதான் அந்தத் திருவடி சக்தியைப் பதிக்கவேண்டுமேயல்லாமல் உடம்பிலே உள்ள பிற உறுப்புக்களிலே பதித்தால் பயனில்லை. இப்பொழுது நம்முடைய நாட்டிலே கூட ஒரு செய்தியைத் தலைவர்களுக்கு அறிவித்து விட்டால் அதை நாடு முழுவதும் பரவச்செய்துவிடுகிறார்கள். ஒரு தலைநகரத்திலே ஒன்று வெளிவருமானால் அது நாடு முழுவதும் பரவி விடுகிறது. அதுபோலத்தான் நம்முடைய முடியிலே அவனுடைய அடியை வைக்கிறான். இத் தத்துவத்தைத்தான் நம்முடைய பெரியவர்கள் திருவடி தீட்சை என்றார்கள். அதனைத் திருமூலர் பெற்றார் என்ற சிறப்பை இங்கே நாம் நுட்பமாகக்

கவனிக்கவேண்டும். திருமூலரே இங்ஙனம் அருளிச்செய்திருத்த லால் சேக்கிழார்,

" அந்தியிளம் பிறைக்கண்ணி அண்ணலார் கயிலையினில்
முந்தைநிகழ் கோயிலுக்கு முதற்பெருநா யகமாகி
இந்திரன்மால் அயன்முதலாம் இமையவர்க்கு நெறியருளும்
நந்திதிரு வருள்பெற்ற நான்மறையோகிகள் "

என்று அவரைக் குறிப்பாராயினர்.

திருமூலர் தமது நூல் முழுவதிலும் நந்தி, நந்தி என்று அளவற்ற இடங்களில் கூறுதலைக் காணலாம். இஃது அவரது ஆசாரிய பக்தியைத் தெற்றென விளக்குவது.

**முதற்குரவர் நந்திதேவர் :**

நந்தி என்பதும் ஆனந்தி என்பதும் ஒன்றுதான். இன்பம் உடையவன்; இன்பமே வடிவானவன்; இன்பத்தை வழங்குபவன் என்றெல்லாம் இந்தப்பதத்திற்குப் பொருள் கூறலாம். இந்தப் பொருள்கள்யாவும் சிவபெருமானுக்கே பொருந்தும். அதனால் நந்திஎன்பது சிவபெருமானுடைய பெயர்தான். ' நந்தி, நம்பன், நாதன், தற்பரன் ' என்று நிகண்டில் சிவபெருமானுக்கு உரிய பெயர்களில் ஒன்ருக நந்தி என்பது கூறப்படுகிறது. மேலும் தேவாரத்தில் ஞானசம்பந்தப் பெருமான் ' நந்தி நாமம் நமச் சிவாயவே ' என்று சொல்லுகிருர்.

" வைச்ச பொருள் நமக்கு ஆம்என்று சொல்லி மனத்தடைத்து
அச்சம் ஒழிந்தேன் அணிதில்லைச் சிற்றம்பலத் தொருத்தன்
பிச்சன் பிறப்பிலி பேர்நந்தி உந்தியின் மேலசைத்த
கச்சின் அழகுகண்டாற் பின்னைக் கண்கொண்டு காண்ப
[தென்னே ! "

என்னும் அப்பர் திருவாக்கிலும் சிவபெருமானது பேர் நந்தி என்று கூறப்படுதலைக் காண்கின்ருேம். எனவே, நந்தி 'என்பது பரமேசுவரனுடைய பெயர். அதனைத் தம்முடைய சிஷ்யர்களுக்கு அளிக்கின்ருர். இந்த நந்தி என்கின்ற பெயரைச் சிவபெருமான் நந்திதேவருக்குத் தீட்சாநாமமாக அளித்தார். அதனல் நந்தி என்கிற பெயர் நந்திதேவருக்கே சிறப்பாக உரியதாயிற்று, நந்தி பெருமானிடம் உபதேசம் பெற்று அவரைப் போலக் கயிலாயத் திலே இருக்கும் மாணக்கர்கட்கும் நந்தி என்ற பெயர் சொல்லப் படுவது உண்டு. நந்தி என்னும் சொல் திருக்கோயில்களில் இறைவன் சந்நிதியில் பலி பீடத்திற்கு அருகில் விளங்கும்

இடபத்தையோ, திருவீதியுலாவில் பெருமான் எழுந்தருளி வரும் இடபவாகனத்தையோ குறிப்பதன்று. இறைவனுடைய அருளுப தேசம் பெற்று உபதேச பரம்பரையைத் தோற்றுவித்த முதற் குரவரே நந்தி எனப்படுவர். இவர் மனிதர்போலும் உருவமே பெற்றுத்திகழ்வர்.

## மூலன் மரபில் மௌனமடம் :

நந்திகள் நால்வர். இவர்கட்கேயன்றி சிவயோகமாமுனி போன்ற பெரியவர்கட்கும் நந்திபெருமான் ஞானோபதேசத்தை அருளும் ஞானாசாரியராய் விளங்குகின்றார். அவரால் நிலவுலகில் அமைந்த ஞானபரம்பரையில் ஒன்றுகத்தான் திருமூலர் தமிழ் நாட்டில் தமது ஞானபரம்பரையைத் தோற்றுவித்தார். நந்தி பரம்பரையில் சனற்குமாரர் வழியாகிய மெய்கண்ட சந்தானம் ஒன்றே இன்று தெளிவாக உலகம் அறிய விளங்கி வருகிறது. இவ்வழியில்வந்தனவே தருமபுரம், திருவாவடுதுறை, திருவண்ணாமலை ஆதீனம் முதலியனவாகும். ஆனால், திருமூலர் பரம்பரையில் வந்திருக்கிற மடம் ஒன்று ஏதாவது இருக்கிறதா என்றால், தாயுமான அடிகள், ' மூலன் மரபில்வரு மௌன குருவே ' என்று பாடுகின்றார். திருச்சிராப்பள்ளிக்குன்றின் அடிவாரத்திலே இருக்கின்ற மடம் மௌனமடம். அந்தமடம் மூலன் மரபிலே வந்த திருமடம். அது தருமையாதீன அருளாட்சியில்உள்ளது. அந்தக் காரணம் பற்றித்தான்போலும் இந்தத்திருமூலர் திருமந்திரத்தை நாம் சொல்லும்படியாகத் திருவருள் கூட்டியிருக்கிறது.

## திருமூலர் பாத யாத்திரை :

அகத்திய முனிவரோடு சிலநாள் உடன் உறைதல் வேண்டும் என விரும்பிய திருமூலர், பூமியிலுள்ள பல தலங்களிலும் சென்று சிவபெருமானை வணங்க எண்ணினர். அதன் காரணமாகத் திருமூலர் பாதயாத்திரையை மேற்கொண்டார்; திருவாவடுதுறையை அடைந்தார். அங்கு ஒப்பிலாமுலைஅம்மையையும் மாசிலாமணியீசரையும் மனமுருகிவழிபட்டார். அண்மையிலுள்ள சாத்தனூரை நோக்கிச் சென்றார். அங்கே அவ்வூர்ப் பசுக்களை மேய்க்கின்ற மூலன் என்னும் பெயருடைய இடையன் காட்டிலே திடீரென விதிவசத்தால் இறந்துவிட்டான். அவனால் மேய்க்கப் பட்டுவந்த பசுக்கள் அவனைச் சுற்றிச் சுற்றிக் கதறுவதை இந்த யோகிகள் கண்டார்.

> " அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
> செந்தண்மை பூண்டொழுக லான்"

என்பது திருவள்ளுவர் வாக்கு. அவ்விலக்கணத்திற்கு இலக்கியமாக எல்லாவுயிர்களிடத்தும் செந்தண்மை பூண்டொழுகும்

அந்தணராக வாழ்ந்தவர் திருமூலர். எனவே, அவர் பசுக்களின் துன்பத்தைக் கண்டு மனம் இரங்கி, மேற்செல்ல மனமில்லாத வராய்த் தமது உடம்பை மிகவும் பாதுகாப்பான இடத்தில் வைத்து, தமக்கு வாய்த்திருந்த சித்தியால் தம்உடம்பை விட்டு அவ்விடையனது உடம்பில் புகுந்து (பரகாயப் பிரவேசம்) எழுந்தார். பசுக்கள் துன்பம் நீங்கிக் களித்தன.

## சிவயோகத்திலிருந்து திருமந்திரம் அருளினர்:

மாலையில் பசுக்களை இல்லங்களில் சேர விடுத்தார். மூலன் மனைவி உடல் தோற்றத்தால் இவரைத் தன்னுடைய கணவன் என்று நினைத்தார். தம்மில்லத்திற்கு அவர் வராதது கண்டு அவரை வீட்டுக்கு அழைத்தார் அவர் தனக்கும் அவளுக்கும் சம்பந்தம் இல்லை என்பதை அந்த ஊரார் மூலம் விளக்கி, மறு நாள் அந்தக் காட்டிற்குச் சென்று தாம் சேமித்து வைத்த உடலைப் பார்த்தார். அது மறைந்துபோய் விட்டது. இந்த நிகழ்ச்சி நம்மைத் திருவருட்பணியில் ஈடுபடுத்தத்தான் நிகழ்ந் திருக்கிறது. இந்த நாட்டிற்கு நம்மால் ஒரு பணி செய்விக்க வேண்டும் என்பதற்காகத்தான் இறையருள் இதை நிகழ்த்தி யிருக்கிறது என்பதனை அவர் நன்கு உணர்ந்து விட்டார். எல்லாம் சிவன் செயலே என உணர்ந்த திருமூலர் திருவாவடு துறையில் அரச மரத்தின் அடியில் சிவயோகத்தில் இருந்து ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல் உள்ள திருமந்தி ரத்தை அருளிச் செய்தார்.

## மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தவர்:

திருமூலர் 3000 ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்திருத்தல் கூடுமா என்று சாதாரண மக்கள் கருதுவர், இறைவன் திருவருள் வாய்க்குமானால் இது எளிமையான விஷயமே.

" இருந்தேன் இக்காயத்தே எண்ணிலிகோடி " எனவும்

" ஞானத் தலைவிதன் நந்தி நகர்புக்கு
ஊனமில் ஒன்பது கோடி உகந்தனுள்
ஞானப்பாலாட்டி நாதனை அர்ச்சித்து
நானும் இருந்தேன் நற்போதியின் கீழே". எனவும்,

வரும் திருமூலர் வாய்மொழிகளால் இவ்வுண்மையை உணரலாம். பல்லாண்டுகள் ஊண் உறக்கமின்றி உயிர்வாழமுடியும் என்பதை அறிவியலும் ஒப்புக்கொள்ளும். வானவெளி ஆராய்ச்சியில் ஈடுபடு வோர் உணவுச் சத்து நிரம்பிய மாத்திரைகளை உண்டு பல மாதங்கள் உயிர் வாழ்கின்றனர். வைரஸ் என்ற நோய்க்கிருமிகள் காது, கண், மூக்கு, வாய் வழியாக உடலிற் புகுவது போல ஜீவ சத்துக்களைத் தரும் நுண் அணுக்கள் மெய்ஞ்ஞானிகள் உடலிற்

புகுந்து அவர்கட்கு உணவுச்சத்தை வழங்கி அவர்களை வாழ வைக்கின்றன. இக்காலத்தில் விளங்கும் ஒரு யோகியை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

## சிவயோகியார் திருமூலரானார் :

ஆந்திர மாநிலத்தில் மும்முடிவரம் என்ற ஊரில் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த பாலயோகி என்பவர் 15 ஆண்டுகளுக்கு மேலாக ஊண் உறக்கமின்றித் தனித்து இருந்து தவம் பெருக்கி வருகின்றார் என்பதும் சிவராத்திரி அன்று ஒருநாள் மட்டும் அவர் மக்களுக்குக் காட்சிதருகின்றார் என்பதும் பலரும் நன்கறிந்த ஒன்று. உயிரினங்களில் ஒருவகைக் கரடி சிலகாலங்களில் குகைகளில் ஒடுங்கியிருந்து பல்மாதங்கள் உயிர் வாழ்கின்றன என்பதையும், தவளைகள் சிலகாலம் மண்ணில் புதைந்திருந்து உயிர் வாழ்கின்றன என்பதையும் நாம் கருதுதல் வேண்டும். இவற்றையெல்லாம் உணர்ந்து பார்க்குமிடத்துத் திருமூலர் 3000 ஆண்டுகள் வாழ்ந்து தவம் செய்தார் என்ற வரலாறு உண்மையேயாகும் என்பதை நாம் உறுதியாக நம்பலாம். மூலன் உடம்பில் புகுந்து எழுந்ததனால் சிவயோகியார் அன்றுமுதல் திருமூலர் என்ற பெயர் பெற்றார். திருமூலர் பல்லாற்றானும் சைவ சமயத்தின் தொல்லாசிரியர் என்பதே துணிபு.

---

# அட்டைப்பட விளக்கம்

சிவபெருமான் சோதி வடிவாகத் தோன்றிக் காட்சியளித்த காலமே சிவராத்திரியாகும். அதனால் சோதிலிங்கத் தலங்கள் பன்னிரண்டிலும் சிவராத்திரி மிகச் சிறப்பாகக்கொண்டாடப்படுகிறது. சோமநாதம், ஸ்ரீசைலம், உஜ்ஜைனி, ஓங்காரம், வைத்தியநாதம், பீமசங்கரம், இராமேசுரம், நாகேசம், வாரணாசி (காசி), திரியம்பகம், கேதாரம், குஸ்மேசம் என்பன சோதிலிங்கத்தலங்களாகும். அவற்றுள் சோமநாதமே முதன்மையான தலமாகும். சோமன் (சந்திரன்) இங்குள்ள பெருமானைபூசித்துத் தக்கனது சாபம் நீங்கி ஒளி பெற்றமையால் வந்த காரணப்பெயர் சோமநாதம். இத்தலம் குஜராத் மாநிலத்தில் சௌராஷ்டிர நாட்டில் உள்ளது. இப்பன்னிரண்டு சோதிலிங்கத் தலங்களையும் தருமையாதீனம் 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தரிசனம் செய்துள்ளார்கள். அவர்கள் எழுந்தருளும் காட்சியுடன் திருக்கோயில் தோற்றத்தை இவ்விதழ் அட்டையில் சிவராத்திரி (28—2—76) நாளை முன்னிட்டு வெளியிட்டு மகிழ்கிறோம்.

# சரபருக்குக் கோடி அருச்சனை

திரு. என். இராமகிருஷ்ணு

**திருபுவனம் :**

தஞ்சை மாவட்டத்தில் சோழர்கள் கட்டிய கோயில்கள் பல உள்ளன. அவற்றுள் மிகப்பிரசித்தமானவை தஞ்சைப் பெரிய கோயில், தாராசுரம் கோயில், திருபுவனம் கோயில் ஆகியவைகளாகும். இவை சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டானவை. மேலும் திருபுவனம் கோயிலில்தான் சரபர்கோயில்உள்ளது. சரபருக்குத் தனிக்கோயில் உள்ள இடம் இதுஒன்றுதான். திருபுவனவீரபுரம் என்பதே இத்தலத்தின் பழமையான பெயர். இப்போது திருபுவனம் என்று வழங்கி வருகின்றது. கும்பகோணத்திலிருந்து கிழக்கே ஐந்துகல் தொலைவில் உள்ளது. பேருந்துவசதிஉண்டு. இத்திருக்கோயில் தருமையாதீன அருளாட்சியில் உள்ளது.

மூல்வர் பெயர் : ஸ்ரீ கம்பஹரேசுவரர் - நடுக்கம்தீர்த்த பெருமான். இறைவியார் திருப்பெயர் ஸ்ரீ அறம்வளர்த்த நாயகி – தர்மசம்வர்த்தனி.

இரணியனது குருதியைப் பருகிய நரசிம்மர் மதிமயங்கி உலகத்தை அழிக்கத் தொடங்கியகாலை இத்தலத்துப் பெருமான் சரபப்பறவை உருவம் கொண்டு அதன் கொடுமையை அடக்கியதால் சரபேசர் என்ற பெயரும் இம்மூர்த்திக்கு உண்டு. புராணவாயிலாக நாம் அறிந்தது, இரணியன் என்னும் அரக்கனை நரசிம்மர் வதம் செய்தார். அந்த நரசிம்மரின் உக்ரம் தாங்காமல் தேவர்கள் இறைவனை வணங்கினர். அவர் சரபர் வடிவெடுத்து அவர்களின் கம்பத்தினை ( நடுக்கத்தை – பயத்தை ) போக்கியதால் கம்ப்ஹரேசுவரர் எனப் பெயர் பெற்ருர் என்பது.

**சரபர் வரலாறு :**

நரசிம்மர் உருவில் இருந்த திருமாலை சாந்தப்படுத்த சிவபெருமான் சரபருபத்தில் தோன்றினுர். திருமாலைக் கொல்லாமல் தோலை உரித்து ஆடையாக அணிந்தார். சரபரைக் கண்ட உடன் திருமால் சிவனுடன் ஐக்யமானுர் என்பதும் புராண வரலாறு.

ரிக்வேதமும் யஜுர்வேதமும் சரபர்பற்றி விரிவாகக் கூறுகின்றன. "சரபோபநிஷத்", என்பதில் மந்திரங்களின் வரலாறு சுருக்கமாகக்கூறப்பட்டுள்ளது. மோக்ஷமளிக்கும் பரம்பொருளே சரபர். சரபமூர்த்தியின் திருவுருவம் பற்றிக் காஞ்சிப்புராணமும், பிரம்மாண்டபுராணமும், கௌரிமாயூரபுராணமும், கூறுகின்றன. சரபர் கீழே நான்கு கால்கள் மேலே நான்கு கால்கள் ஆக எட்டுக் கால்களும் நான்கு திருக்கரங்களும் உடையவர். ஆயிரம் கை உடையவர் என்றும் கூறுவர். பறவையின் அங்கமாக அலகும் இறக்கைகளும் உடையவர். விலங்கின் அங்கமாக வாலுடையவர். அது நரியின் வால்போல் உள்ளது என்றும்கூறுவர். கூர்மையான நகங்களும் கோரைப் பற்களும் உடையவர். சூரியன், சந்திரன், அக்னி என்ற மூன்று கண்களையுடையவர். சடையும், பிறையும் உடையவர். பெரிய கூச்சல் உடையவர். மின்னல் போல் ஒளியுடையவர். தூக்கியகாதும், கருத்தகழுத்தும், பயங்கரமான துடிக்கும் நாசி உடையவர். துர்க்கையும் காளியும் இரண்டு இறகுகளாக உள்ளனர். புயலை விட கடுமையான வேகம் கொண்டவர்.

இருதயத்தில் பைரவரும், வயிற்றில் பாடவாக்கினியும் தொடைகளில் வியாதியும் மிருத்யுவும் உடையவர். தலையில் கங்கையும் கிரீடமும் கொண்டவர்; தொடையில் நரசிம்மர் கிடக்கின்றார். ஸ்ரீ ருத்திரத்தில் நரசிம்மர் சரபரைத் துதிப்பதாக நாமங்கள் கூறப்படுகின்றன. பிரமாண்டபுராணம் இதைக் கூறுகின்றது. பிரதோஷ காலத்தில் பூஜிக்கப்படுபவர் சிவன். மற்றவர் பூஜிக்கத் தக்கவர் இல்லை. ஆனால் பிரதோஷ காலத்தில் நரசிம்மரைப் பார்க்கலாம் என்று அறிகிறோம். ஸ்காந்த புராணம் யஜுர்வேதம் முதலியவற்றில் சரபர் துதி உள்ளன. காசிகாண்டத்தில் சிவனுடைய 64 மூர்த்தங்களைக் கூறும்போது 30 ஆவதாக நரசிம்ஹமூர்த்தி கூறப்படுகின்றார். மந்திர சாஸ்த்திரங்கள் சரபமூர்த்தியைப்பற்றிக் கூறுகின்றன. ஆகாச பைரவ கல்பம் என்னும் நூல் சரபர் மந்திரங்களையும் தியானங்களையும் பற்றிக்கூறுகின்றது. சரபாஷ்டகம்சரபபுஜங்கம்போன்றவை துதிகளாகும். சரபமந்திரங்கள் சத்ருக்களை அழிக்கும் சாந்தி, வசீகரணம் சத்ருஜயம், பின்னைப்பேறு, பிசாசு தொல்லை முதலியவற்றை சரப வழிபாடு நிவர்த்தி செய்யும். கும்பத்தில் தீர்த்தம் வைத்து சரப மந்திரம் சொல்லி பூஜித்து நீரை அபிஷேகம் செய்து கொண்டால் எல்லாவிதமான துன்பங்களும் நீங்கும். வாத ரோகம், வாதசூலை, பிசாசு பீடை, காக்கைவலிப்பு முதலியன 3 மாதங்களில் நீங்கும் தக்க ஆசாரியனைக் கொண்டு ஹோமம் நடத்த வேண்டும் ரக்ஷை கட்டிக்கொண்டால் தோஷம் நீங்கும். பொன்னால் செய்தால் ஆயுள் பூராவும் பலன் அளிக்கும். மற்றும், செம்பு, வெள்ளி ஈயம் முதலியவற்றாலும் செய்யலாம். ரக்ஷை

அணிந்தவர்கள் 6 மாதம் நதியைத் தாண்டலாகாது. வெள்ளிக் கிழமை தூபம் காட்டவேண்டும். காக்கைக்குத் தினமும் அன்ன மிடவேண்டும். அறுவை சிகிச்சை இல்லாமல் குணமான சிலரை நான் அறிவேன். ஞாயிறு அன்று மாலை ராகுகாலத்தில் (4-30 to 6) சரபரை வழிபட்டால் சிறந்த பலன் கிட்டும். சரபகாயத் ரீயை விசேஷமாக ஜபிக்கலாம்.

" ஸாலு வேஸாய வித்மஹே பக்ஷிரா ஜாய தீமஹி
தன்னோ ருத்ரா : பிரசோதயாத் "

என்பது மந்தரம். பாம்பு பயம் நீங்கும். எல்லா மந்திரங்களையும் தக்க ஆசாரியனிடம் உபதேசம் பெற்று ஜபிக்க வேண்டும்.

இவைகளை மனத்தில் கொண்டு தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்அவர்கள்" சரபருக்குக்கோடிஅர்ச்சனை " துவக்கி யுள்ளார்கள். உலக க்ஷேமத்தின் பொருட்டு இவ்வர்ச்சனை நடை பெறுகின்றது. திருப்பனந்தாள் காசிமடம் ஸ்ரீமத் காசிவாசி முத்துக்குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகளும் இவ்வர்ச்சனையில் சிறப்பாக ஈடுபாடு கொண்டுள்ளார்கள். கோடியர்ச்சனையில் தற்பொழுது முப்பதாவது லக்ஷம் நடைபெறுகிறது. இவ்வழி பாட்டில் பொதுமக்களும் கலந்துகொண்டு அருள் பெறலாம். அவரவர்கள் நாமம், நக்ஷத்திரம், முதலியவற்றையும் தம் முக வரியையும் தெரிவித்து கீழ்க்காணுமாறு தொகை அனுப்பினால் அருச்சனைசெய்து பிரசாதம் அனுப்புவார்கள்.

அர்ச்சனை விவரம் :

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ சரப வேள்வி | ஒன்றுக்கு | ரூ. | 250—00 |
| ஏகதின லக்ஷார்ச்சனை | ,, | ரூ. | 500—00 |
| பஞ்சமுக அர்ச்சனை | ,, | ரூ. | 50—00 |
| சகஸ்ரநாம அர்ச்சனை | ,, | ரூ. | 10—00 |

தனியாக ரூ 5 அனுப்பினால் சரபர் உருவம் பதித்த வெள்ளிக் காசு ஒன்றும் அனுப்பப்படும்.

கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி :—

பொருளாளர், ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானம்,
திருபுவனம் P. O. ❋ தஞ்சைமாவட்டம்.

# திருவாசகத்தில் ஒரு மணிவாசகம்*

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. ந. ரா. முருகவேள், M. A., M. O. L.,

## முன்னுரை :

திருவாசகம் தமிழிலுள்ள தலைசிறந்த சமயநூல் என்பதனை அனைவரும் அறிவர். ஓதுபவர் உள்ளத்தையெல்லாம் கொள்ளை கொண்டு, கருங்கல் மனத்தையும் கரைந்து கசிந்து உருகும்படி செய்வதில், திருவாசகம் ஈடு இணையற்றது என்பதனை வாழையடி வாழையாக வந்த சான்றோர்கள் அனைவருமே, தத்தம் அநுபவத்தில் கண்டுணர்ந்து போற்றிக் குறிப்பிட்டுள்ளனர்.

அண்மைக் காலத்து அருட்பெருஞ்சான்றோராகிய இராமலிங்க அடிகளார் "சாத்திரங்களில் சிறந்தது திருமந்திரம், தோத்திரங்களில் தலைசிறந்தது திருவாசகம்" எனப் பலகாலும் அன்பர்களுக்கு அறிவுறுத்துவாராம். இதனால் திருவாசகத்தின் சிறப்பு எத்தகையது என்பதை, நாம் ஒருவாறு நன்கினிது தெளியலாம்.

## சிறந்த திருப்பாடல் :

அத்தகைய அரும்பெரும் சிறப்பு வாய்ந்த திருவாசகத்தில், அனைத்துமேசிறந்த அரியபாடல்கள் ஆகும். ஆயினும்அவற்றுள்.

"இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
 தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்;
 நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
 திருப்பெருந் துறையுறை சிவனே ;
ஒன்றுநீ யல்லை அன்றியொன் றில்லை
 யாருன்னை அறியகிற் பாரே" ?

---

* சென்னைத்தியாகராயநகர்த் தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில், நடைபெற்றுவரும் திருவாசக வகுப்பில் விளக்கப் பெற்ற கருத்துக்கள் சில, இக்கட்டுரையின்கண் தொகுக்கப் பெற்றன.

எனவரும் அழகிய இனிய பாடல், திருவாசகப் பாடல்களிலேயே மிகமிக முதன்மையான, விழுமிய முழுமணிபோன்று பெருநலம் சான்ற ஒரு சிறந்த பாடலாகும் எனலாம். இதனைத் திருவாசகத்தின் 'இருதயகலோகம்' என்றும் கூறலாம். தொட்டனைத் தூறும் மணற்கேணி போலக் கற்றனைத்தூறும் பற்பல சிறந்த நுண் பொருள்களைத் தன்னகத்தே பொதித்துக்கொண்டு, பொலிந்து விளங்குகின்றது, இவ்வரிய சிறந்த திருப்பாடல்!

## பாடலின் கருத்து :

திருவாசகத்தில் 'கோயிற்றிருப்பதிகம்' என்னும் பகுதியில் "அநுபோக இலக்கணம்" கூறும் பாடல்களுள் ஒன்றாக, இப்பாடல் அமைந்துள்ளது. இதன்கண் மாணிக்கவாசகப் பெருமான், இறைவன் தமக்கு அருள் செய்ததனையும்; தம்மைப்பற்றியிருந்த மலத்தைப் போக்கித் தம் அறியாமையை நீக்கியதனையும், தம்முடைய உள்ளத்தில் ஞானஒளியைப் பரப்பும் சூரியனாகத் தோன்றி நிலைபெற்ற இயல்பினையும், அத்தகைய இறைவனின் அருட்பெரும் இயல்புகளைத்தாம் நினைப்பற நினைந்து போற்றி வருதலையும் குறிப்பிட்டருளுகின்றார்.

இறைவன் அணுவினும் மிகமிக நுண்ணியனும் எல்லாப் பொருள்களிலும் கலந்து நின்று இயக்கிவரும் அத்துவித இயல்பும்; உலகிலுள்ள உயிர்ப்பொருள் உயிரில் பொருள்கள் (சத்து, சடம்) என்பவை, இறைவன் இயக்கினால் அன்றி இயங்கமாட்டாமையும்; அங்ஙனமேயாவற்றையும் இயக்கும்இறைவன் அவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்ட அதீத நிலையில் விளங்கும் தன்மையும்; அத்தகைய இறைவனை உயிர்கள் தம்முடைய முயற்சியினால் சுட்டறிவு கொண்டு அறிதல் இயலாது என்னும் உண்மையும்; இப்பாடலின்கண் நன்கினிது விளக்கப்பட்டு இருக்கின்றன. இப்பாடலின் ஒவ்வொரு சொல்லும் மிகமிக ஆழ்ந்து ஆராய்ந்து நுனித்து உணர்தற்கு உரியதாக அமைந்துள்ளது.

## பாடலின் பொருள் :

"இந்நாளில் எனக்கு அருள் புரிந்து என்னுடைய அறியாமையாகிய இருளைப்போக்கி, மனத்தின் உள்ளே வெளிப்படுகின்ற சூரியனைப்போல வெளிப்பட்டு நிலை பெற்ற, நின்னுடைய சிறந்த இயல்புகளை இடைவிடாமல் எப்பொழுதும் நினைந்து துதிக்கும் பேற்றை யான் பெற்றேன்.

உன்னையல்லாமல், வேறொரு பொருளும் இல்லாத படி, எல்லாப் பொருள்களிலும் கலந்து கலந்து அணுத் தன்மைப்பட்டு நுணுகி, நுணுகி, எங்கும் ஒரு தன்மை யாய்விரவி நிற்கும் ஒப்பற்ற பொருளாகத் திருப்பெருந் துறையின்கண் உறைகின்ற சிவபெருமானே!

காணப்படும் பொருள்களுள் நீ ஒரு பொருளும் ஆகமாட்டாய். ஆயினும் உன்னையல்லாமல் ஒரு பொரு ளும் இயங்குவதில்லை. இத்தகைய நின்னை அறியும் வல்லமை உடையவர்கள் உலகில் யாவர் உளர்? ஒரு வரும் இலர்".

என்பது, திருவாசகத்தில் வரும் எத்தனையோ பல சிறந்த பாடல்களுள், ஒரு பெரும் விழுமிய முழுமணி போன்று ஒளி விட்டு விளங்கும் இவ்வரிய இனிய பாடலின் திரண்ட பொருள் ஆகும். இதன்கண் ஒவ்வொரு சொல்லும் சொற்றொடரும் மிக நுணுகிய ஆழ்ந்த பொருள் நலம் உடையது. அவற்றை இங்கு இயன்றவரை ஆராய்ந்து காண்போம்.

(1) 'இன்று' என்றது, சிவபிரான் திருப்பெருந்துறையில் குருந்த மரநிழலில் ஆட்கொண்டருளிய புனித நாளை உணர்த்து கின்றது எனக் கொள்ளலாம். மாணிக்கவாசகப் பெருமான் "மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்" (1-32) எனவும்; "பெருந்துறையில் மேய பெருமான் பிரியாது இருந்து உறையும் என் நெஞ்சத்துள் இன்று" (619) எனவும்; "இன்று எனக்கு ஆரமுது ஆனாய் போற்றி" (4-94) எனவும்; "களித்தனன் உன்னைக் கண்ணுறக் கண்டு கொண்டு இன்றே" (391) எனவும்; இன்று என்னும் சொல்லைப் பல இடங்களில் வழங்கி அருளிச்செய்திருத்தல் காணலாம்.

(2) 'எனக்கு அருளி' என்னும் தொடரில், 'எனக்கும்' என்ற இழிவு சிறப்பு உம்மை மறைந்து நின்றது. 'எனக்கு' என்னும் சொல், தம்முடைய சிறுமைகளை எல்லாம் தொகுத்துச் சுருக்கி உணர்த்தும் வகையில் அருளிச் செய்யப்பட்டதாகலின், அஃது இசை எச்சம் எனக் கொள்ளப்பெறும்.

(3) 'இருள் கடிந்து' என்றது, இறைவன் தமக்கு ஞானோ பதேசம் செய்து அறியாமையைப் போக்கியருளிய பேருதவியை வியந்தவாறு. 'குற்றங் கடிதல்' என்றாற்போல 'இருள் கடிதல்' என்று குறிப்பிட்ட திறம் உணர்ந்து இன்புறற்பாலது.

(4) அருளைப் போக்குதலும், ஒளியைப் பரப்புதலும் ஞாயிற்றின் செயல். அம்முறையில் தமது அறியாமை இருளைப் போக்கித் தமக்கு ஞான ஒளியைக் கொடுத்தருளியமை பற்றி அடிகளார் இறைவனை ஞாயிறு என வியந்து போற்றினர். நக்கீரர் பெருமானும், முருகனை ஞாயிறு என விளக்கியிருத்தல் இங்குக் கருதற்பாலது. மாலையில் மறையும் சூரியனை விலக்கி, ஒளி மிகுந்த அழகிய காலைக் கதிரவனை உணர்த்துவதற்காக 'எழுகின்ற ஞாயிறு' என்றார். 'ஞாயிறே போன்று' என்பதில் ஏகாரம் பிரிநிலை; சந்திரன் விண்மீன்கள் ஆகிய பிற ஒளிப் பொருள்களை விலக்கியது.

(5) சூரியன் கிழக்குக் கடலில் அல்லது உதயமலையில் தோன்றுவதாகக் கூறுவது கவிமரபு. அந்தப் பௌதிக சூரியனை விலக்கி, ஞான சூரியனாகிய இறைவனையே சுட்டி உணர்த்த 'உள்ளத்து எழுகின்ற ஞாயிறு' என விதந்து கூறினர். இனி, 'உள்ளத்து' என்பதை 'எழுகின்ற' என்னும் சொல்லோடு சேர்த்துக்கொள்ளாமல், 'உள்ளத்து நின்ற நின்தன்மை' எனவும் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளலாம். இறைவன் உலக மெங்கும் வியாபித்திருந்தாலும், அன்பர்களாகிய ஞானிகளின் உள்ளத்திலேயே நிலைபெற்றுத் தங்கி வீற்றிருக்கிறான் என்பது, வேதாகமங்களின் முடிபு. அஃது இங்கே குறிப்பிடப்பட்டதாகக் கொள்ளலாம். "பெருந்துறையின் மேய பெருமான் பிரியாது இருந்து உறையும் என் நெஞ்சத்து இன்று" எனவும்; "இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" எனவும் மணிவாசகர் கூறுதல் காண்க.

(6) 'நின்ற' என்னும் சொல் காலவழுவமைதி. 'நிற்கின்ற' என்னும் பொருளில் வந்தது. "முக்காலத்திலும் ஒத்தியல் பொருளைச் செப்புவர் நிகழும் காலத்தாளே" என்பது நன்னூற் சூத்திரம். 'மலர்மிசை ஏகினான்' என்ற திருவள்ளுவர் இறந்த காலத்திற் குறிப்பிட்டதும், ஆசிரியர் பரிமேலழகர் அதனைக் கால வழுவமைதி என்று விளக்கி யிருப்பதும், இங்கே சிந்தித்து இன்புறுதற்குரியன.

(7) 'நின் தன்மை' என்பது, இறைவனின் உயர்வற உயர்ந்த பெருநலன்களையும், அத்தகைய இறைவன் தம்பொருட்டு எளிவந்து இரங்கிப் புரிந்தருளிய எல்லையற்ற பேரருள் உதவிகளையும், தொகுத்து உணர்த்தும்.

(தொடரும்)

சிதம்பரம் - குகைமடம்

# —: கண்கட்டி :—

# ஸ்ரீ மறைஞான சம்பந்த நாயனர்

திருமுறைக் கலைஞர்

**வித்துவான். திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்**

( மலர் 35, இதழ் 2, பக்கம் 80 இன் தொடர்ச்சி )

## கண்கட்டி - மறைஞானசம்பந்தர் கொள்கை :

குகை - கண்கட்டி மறைஞானசம்பந்தப் பண்டாரம் அவர்கள் சிவாகம சாஸ்திரப்பற்றும், சைவசமயப் பெரும்பற்றும் உடையவர்; சமயகுரவர், சந்தானகுரவர், காரைக்கால் அம்மையார் முதலிய அடியவர் முதலியோர்களிடத்துப் பேரன்பு கொண்டவர்; சைவ சித்தாந்தக் கொள்கைகளைத் தாமியற்றிய பலசைவ நூல்களில் அமைத்துப்பாடியவர்; எளிதில் சைவநுட்பங்களைச் சைவ மக்கட்கு உணர்த்தி வந்தவர். ஆனல் தமது முதிர்ந்த வயதில் மிக்க கல்வியின் முதிர்ச்சியினலோ? அன்றித் தாம்கொண்ட அனுபவ அறிவினலோ? யாதும் அறிதற்கு இயலவில்லை. அவர் அந்தியத்தில் " ஆன்மாவிற்கே இயற்கையாக ஆனந்தம் உண்டு; அது மலத்தால் தடையுண்டுள்ளது; அத்தடை நீங்க வெளிப்படும் ஆனந்தத்தை ஆன்மா அனுபவிக்கும்; சிவனை ஒப்ப ஆன்மாவும் சச்சிதானந்த வடிவு ( சத் - சித் - ஆனந்தவடிவு ) அதுவே முத்திநிலை " என்ற ஆன்மானந்த வாதக் கொள்கையினைக் கைக்கொண்டார்; அதற்கு ஏற்ப முத்திநிலை * என்ற ஒரு நூலை 19 - வெண்பாக்களால் இயற்றினர்; தமது கல்வியின் வன்மையாலும், எடுத்துக் கூறும் பேச்சின் திறமையாலும் ஆன்மானந்தவாதக் கொள்கையினைப் பரப்பினர். அவர்களின் மாணவர் பலரும் அக்கொள்கையினைப் பின்பற்றி நின்றனர்; சைவசித்தாந்தக் கொள்கையினைக் கைவிட்டனர்.

---

* இந்த 'முத்திநிலை' என்ற நூல் கண்கட்டி மறைஞான சம்பந்தபண்டாரம் அவர்களின் சீடர்கள் மூலம் எங்கும் பரவியது அப்போது தருமையாதீனத்து முதற் குருமூர்த்தியாகிய

## கண்கட்டி – மறைஞான சம்பந்தர் இயற்றிய நூல்கள் :

சிதம்பரம்-குகை மடம் - கண்கட்டி ஸ்ரீ மறைஞானசம்பந்தப் பண்டாரம் (அல்லது தேசிகர், நாயனர்) என்பவர், சைவ சமய நூற்கள் பற்பல அருளியவர் ஆவர். அந்நூற்கள்:—

---

ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் முத்திநிலை என்ற நூலை முற்றும் திருக்கண்சாத்தினர்கள்; " இந்நூலின் கொள்கை சைவசித்தாந்தத்திற்கு மிக முரண் உடையதாயிற்றே" என்று திருவுளங் கொண்டார்கள்; ஆன்மாவிற்கு ஆனந்தம் இயற்கை அன்று; திருவருள் பதிவால் மலம் நீங்கச் சிவானந்தத்தில் திளைக்கும் பேறே முத்தி; ஆன்மா சத் சித் வடிவே; சிவம் சத்து சித்து ஆனந்த (சச்சிதானந்த) வடிவு; ஆன்மாவிற்கு உண்டாகும் ஆனந்தம் இறைவனிடம் இருந்து பெற்ற பேறே" என்ற முடிந்த முடிவாக 'முத்தி நிச்சயம்' என்ற ஒரு எதிர் (மறுப்பு) நூலை 22 வெண்பாக்களால் ஆக்கியருளினர்கள். அந்நூல் தம் சீடர்கள் (தம்பிரான்கள்) மூலம் விரைவில் எங்கும் பரவிச் சைவ சித்தாந்தக் கொள்கையினை நிலைநிறுத்தியதும் அக்காலம் கி. பி. 16 ஆம் நூற்றாண்டின் இறுதியின் இடைப்பகுதி ஆகலாம் என்பர்.

இந்த முத்தி நிச்சயம் என்ற சைவ சித்தாந்த நூலுக்குத் தருமையாதீனத்து, திருநெல்வேலி, சிந்துபூந்துறை மடத்தில் வீற்றிருந்த ஸ்ரீவெள்ளியம்பலவாணத்தம்பிரான்சுவாமிகள் அவர்கள் சிவாகம புராணங்கள் சைவ சித்தாந்த நூல்கள், பல சைவ நூல்கள், சைவ பத்ததிகள் முதலியவற்றில் இருந்து தக்க பிரமாணங்களைக்கொண்டு தடைவிடைகளைத் தருக்க நியாயப்படி மிக விரிவாகப் பேருரை ஒன்று கி. பி. 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலே சிதம்பரத்திலிருந்து எழுதி முடித்தார்கள். அந்த 'முத்திநிச்சயப் பேருரை' எங்கும் சீடர்கள்மூலம் விரைவில் பரவியது. கண்கட்டி - ஸ்ரீ மறைஞான சம்பந்தர் சீடர்கள் - ஆன்மானந்தவாதக் கொள்கையினர் முத்திநிச்சய நூலினையும், அதன் விருத்தியுரையாகிய பேருரையினையும் கண்டு உணர்ந்து தாம் தாம் கைக்கொண்ட கொள்கையினை விட்டொழிந்தனர்; சைவசித்தாந்த முத்திப்பேற்றை அடையும் கொள்கையினை விரும்பிநின்றனர்என்பர். இவர்களில் நெல்லைப்பதி - அறச்சாலை மடத்து அதிபர் தமிழாகர முனிவரும் ஒருவர் ஆவர். முத்தி நிச்சயப்பேருரை 22—5—45 ல் தருமையாதீனப் பதிப்பாக அச்சில் வந்துள்ளது.

1. வடமொழி ஆன்மார்த்த சிவபூசா பத்ததி
2. ,, சிவஞானபோதப் படலப் பாகுபாடு
3. சிவதருமோத்திரம் (உபாகமம்: மொழிபெயர்ப்பு)
4. சைவ சமய நெறி
5. சகலாகம சாரம்
6. இறைவனூற் பயன்
7. பரமோபதேசம்
8. ஐக்கிய இயல்
9. பஞ்சாக்கரமாலை
10. வருத்தமற உய்யும் வழி
11. உருத்திராக்கவசிட்டம்
12. திருக்கோயிற் குற்றம்
13. போசன விதி
14. சிவமயம்
15. தொல்காப்பியம்
16. கமலாலய புராணம்
17. அருணகிரி புராணம்
18. மகா சிவராத்திரி கற்பம்
19. மாசசிவராத்திரி கற்பம்
20. சோமவார சிவராத்திரி கற்பம்
21. சோமவார விரத கற்பம்
22. அளவை நூல்
23. பரமததிமிரபானு
24. பதிபசுபாசப்பனுவல்
25. சங்கற்ப நிராகரணம்
26. சிற்றம்பல நாடி மாலை
27. முத்திநிலை

என்பன.

இவற்றுள் 1, 2, 13, 14, 15, 22, 24, 27 இந்த எட்டு நூல்களும் அச்சுக்கு வரவில்லை. ஆனால் அவை ஏட்டுச்சுவடியாக உள்ளன.

யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் தாம் எழுதிய பெரியபுராண சூசனத்திற்கு ஆங்காங்கே சிவதருமோத்திரம் சைவ சமய நெறி, வருத்தமறவுய்யும்வழி, சோமவார விரத கற்பம், உருத்திராக்கவிசிட்டம் முதலிய நூல்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்தாண்டுள்ளார்கள், அன்றியும், 'சிவாலய தரிசன விதி' என்ற ஒரு சிறு உரை நடை நூலுக்கு அருணகிரி புராணம், சிவதருமோத்திரம், சைவ சமய நெறி, உருத்திராக்க விசிட்டம் முதலிய நூல்களையும் கையாண்டுள்ளார்கள்.

சைவ சமய நெறி என்ற நூலுக்குச் சிறந்த தக்க விளக்கத்துடன் 'புத்துரை' ஒன்றும் எழுதி வெளியிட்டுள்ளார்கள். இந் நூல் சைவ சமயத்தவர் ஒவ்வொருவரும் அவசியம் படித்து சைவ சமயச் செய்திகளைச் சிந்தையில் வைக்கத்தக்கது.

தருமையாதீனத்து சீகாழி ஸ்ரீ சிதம்பர நாதமுனிவர் அவர்கள் இயற்றிய நித்திய கன்ம நெறி என்ற நூலையும், சைவ சமய நெறி என்ற நூலையும் படித்து உணராதவர் சைவ சமய நுட்பங்களை அறியாதவர் என்று ஆன்றோர் கூறுவர்.

'சிவதருமோத்திரம்' என்ற உயர் நூலுக்குச் சைவப் பெரியார் ஒருவர் பொழிப்புரையும், சிறு சிறு விளக்கங்களும் வரைந்துள்ளார். இந்நூல் உரையுடன் கி. பி. 1888 இல் அச்சில் வெளிவந்துள்ளது.

முடிவுரை :

சைவ சமயத்திற்கும் செந்தமிழிற்கும் தம் ஆயுள் நாளையே அர்ப்பணித்துக் கைம்மாறு கருதாமல் எப்பற்றும் சிறிதும் இன்றி உயர் சைவ ஒழுக்க நிலையில் இருந்துவந்த சிதம்பரம் - குகை மடம் கண்கட்டி ஸ்ரீ மறைஞானசம்பந்தப்பண்டாரம் அவர்களின் நினைவு ‡ சைவ நன்மக்களுக்கு நன்னெறியினைக் காட்டும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

‡ இவரது நினைவுநாள் ஒன்றும் அறிதற்கில்லை. பெரிய புராணத்தில் வருகின்ற தொகையடியார் ஒன்பதின்மர் அடைந்த நாள் அறியப்படாததனுல், தில்லைவாழந்தணரைச் சித்திரை மாதம் முதல்நாளிலும், மற்றைய எட்டு அடியார்களைப் பங்குனி மாதம் இறுதிநாளிலும் குருபூசை செய்து போற்றும் மரபுபோல் கண்கட்டி - ஸ்ரீ மறைஞானசம்பந்த நாயனுருக்கும் பங்குனி மாதத்து இறுதியில் நினைவுநாள் வழிபாடு புரிந்து போற்றுவது முறையாம்.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Sri Sattanathaswami Devasthanam, Sirkali.

"Although there were not many devotees at the time I visited the temple, it seems to be of great importance. That Lord Siva came to this place and Gnanasambandar sang his first song here indicate that it is very holy. I greatly appreciate the temple officer taking me around personally and explaining everything about the temple and the saint associated with it and the mythology. I am also thankful to his assistant and to the two priests who showed me the idol of Lord Siva as well as to the priest who gave the milk at Gnanasambander temple."

(Sd) CHRISTINE FOLEY,
1253, Brun Swick Lane,
Ventura, California - U S A.

15—10—75.

# சிவஞானசித்தியார் தெளிபொருள் விளக்கம்

தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைமணி
திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

( மலர் 35. இதழ் 1. பக்கம் 20 இன் தொடர்ச்சி )

பெறுவதிங் கென்ப டைத்துப் ?
　　பெற்றது விளையாட் டென்னில்,
சிறுமழ வீறைய தாகும் ;
　　செய்திடும் கன்மத் தென்னின்
உறுபெருங் கன்மஞ் செய்வோர்
　　முன்புள ராவர் : உண்மை
அறிவுறின், ஞால மெல்லாம்
　　அநாதியென் றறிந்தி டாயே. 87

## இதன் தெளிபொருள்

'இறைவன் உலகத்தைப் படைத்தான்' எனக் கூறின், 'படைத்து அவன் பெறும் பயன் யாது' என்றும் வினா எழும். அதற்கு, 'விளையாட்டே பயன்' என விடை கூறினால், 'இறைவன்' என்பவன் பயன் இல்லாத சிலவற்றைச் செய்து விளையாடுகின்ற, அறிவு நிரம்பாத ஒரு சிறுபிள்ளையாதல் வேண்டும். 'அவ்வாறில்லை ; உயிர்கள் செய்த வினைக்கு ஈடாக அவ்வினையின் பயனை ஊட்டுவிக்கும் நோக்கத்துடனே படைத்தான்' எனக் கூறினால், 'இறைவன் உலகத்தைப் படைப்பதற்கு முன்பே வினையைச் செய்பவரும், வினையைச் செய்வதற்கு வேண்டும் கருவி கரணங்களும், நிலைக்களமாகிய உலகமும் இருந்தன' எனப்பட்டு, 'இறைவனே உலகத்தைப் படைத்தான்' என்பதுபொருந்தாதாம். ஆகையால், நீ உண்மையை அறியவிரும்பினால், உலகமும், உலகத்துப்பொருள்களும் ஒருவராலும் படைக்கப்படாமல் இயல்பாகவேஎன்றும் உள்ளன என்று அறிவாயாக.

### விளக்கம்

அது, பகுதிப் பொருள் விகுதி. செய்திடும் - செய்வான் ; படைப்பான். "கன்மம் செய்வோர்" என்றது உபலக்கணமா தலின், அதனோடு பிறவும் கொள்ளப்பட்டன. (24)

உருவொடு நின்றான் என்னின்,
உருவம்முன் படைத்தார் வேண்டும் ;
உருவவன் இச்சை என்னின்,
உலகெலாம் இச்சை யாகும் ;
உருவுல கத்து ளோர்கட்
குறுவது கன்மால் என்னின்,
உருவுடை யோர்கட் கெல்லாம்
உற்றது கன்மத் தாமே. 88

## இதன் தெளிபொருள்

இன்னும், 'முதல்வன் ஒருவன் இருந்து உலகத்தைப் படைத்தான்' எனக் கூறினால், 'அவன் உருவம் உடையவனோ, உருவமற்ற அருவமானவனோ' என வினவுவார்க்கு யாதானும் ஒருவகையில் விடை பிறுத்தல் வேண்டும்.

'முதல்வன் உருவமுடையவன்' எனக் கூறினால், பிறருடைய உருவத்தை முதல்வன் படைத்தல்போல, அவனுடைய உருவத்தைப் படைத்த மற்றொரு முதல்வன் இருக்கவேண்டும். (இவ்வாறே மேலும் வரம்பின்றி ஓடும்.)

'முதல்வனது உருவத்தைப் படைக்க மற்றொரு முதல்வன் வேண்டுவதில்லை ; அவன் தானே தனது இச்சையால் உருவங் கொள்வன்' எனின், 'அவ்வாறே உருவமுடைய பிறரெல்லாரும் தம் தம் இச்சையால் கொள்வர்' எனப்பட்டு, 'உலகத்து உருவங்களை ஒரு முதல்வன் படைத்தான்' என்னும் வாதமே தோற்றொழியும்.

'இல்லை ; உலகத்து உயிர்களின் உருவம் அவற்றின் இச்சைப்படி வரக் காணாமையால், அவ்வுருவங்கள் அவ்வவ் வுயிர்களின் கன்மத்தால் வருகின்றன என்பது உமக்கும் (பௌத்தர்க்கும்) உடன்பாடுதானே' எனின், நல்லது ; உருவங்கள் யாவும் அவற்றையுடையவர்களது கன்மத்தால் வருவனவாதலின், முதல்வனும் உருவம் உடையவனாயின், அவனது உருவமும் கன்மத்

தால் வந்ததேயாக, ' முதல்வனுவான் உயிர்களின் வேறுபட்ட ஒருவன் ' என்பது இல்லாதொழியும். அதனுலும், ' உலகத்தைப் படைத்த முதல்வன் ஒருவன் உளன் ' என்பது பொருந்தாக் கொள்கை யாதல் அறிக.

## விளக்கம்

" உலகெலாம் " என்பதில், ' உலகு ' என்பது உயிர்களைக் குறித்தது. ' கன்மத்தால் ' என்பதில் அத்துச் சாரியை தொகுத்தலாயிற்று. (25)

அருவெனில், பவத்தி னின்றும்
 எடுத்திடான் ஆகா யம்போல் ;
மருவினன் நிழல்போல் என்னில்,
 மருவினேர்க் காகும் மாட்சி ;
பெருகிய அறிவுண் டென்று
 பேசிடின், நேசத் தோடும்
கருதிட உருவம் வேண்டும் ;
 இல்லையேல் கருதல் இன்றே. 89

## இதன் தெளிபொருள்

' முதல்வன் உருவம் உடையவன் ' என்றுல் மேற்கூறியவாறு குற்றம் உண்டாதல் பற்றி, ' உருவம் உடையனல்லன் ; அருவனே ' எனக் கூறின், அருவப் பொருள்கட்கு ஆகாயத் திற்குப்போலச் செயல் இல்லை ஆகையால், உயிர்களைப் பிறவிக் கடலினின்றும் எடுக்கமாட்டாதவன் ஆவான். ' உயிர்களை முதல்வன், தான் பிறவிக் கடலினின்றும் எடுப்பதில்லை ; முயற்சி யால் பிறவிக் கடலைக் கடந்து தன்னை அடைந்த உயிர்களுக்கு நிழல்போல இருந்து இன்பத்தைக் கொடுப்பான் ' எனக் கூறின், ' அப்பொழுது முதன்மை உயிர்களுடையதாகுமன்றிக் கடவு ளுடையதாகாது.

இனி, முதல்வனுவான் அறிவுடையவனுதலே வேண்டும் ; அறிவு உருவத்தைப் பற்றியன்றி நில்லாது. அதனுல், முதல்வன் உளனுயின் உருவம் உடையவனேயாதல் வேண்டும். உருவம் உடையவனுயின் மேற்கூறிய குற்றங்கள் யாவும் உளவாகும் ; ஆதலால், உயிர்கட்கு வேருய் ஒரு முதல்வன் உண்டு என்றல் பொருள்படாக் கூற்றேயாகும்.

### விளக்கம்

கருதுதல் - அறிதல். "பெருகிய அருவுண்டென்று" என்பது முதலாக, 'அறிவு உளதாதற்கு உருவம் இன்றியமையாதது' என்பது, உடன்பாட்டிலும், எதிர்மறையிலும் கூறி வலியுறுத்தப்பட்டது. நேசம் - கருணை. 'கருணையும் உருவத்தைப்பற்றியே நிற்கும்' என்பதும் குறித்தவாறு. (26)

எங்கள்நூல் அநாதி யாக
இறைவன்உண் டென்னு மென்னின்,
உங்கள்நூல் உரைப்பா ரின்றி
ஓதுவ தழகி தாகும்,
அங்கவன் றன்னை நூல்கொண்
டறிந்தனம் ; அவனைக் கொண்டே
இங்குநூல் அறிந்தோ மென்னின்,
ஈதொராச் சரிய மாமே. 90

## இதன் தெளிபொருள்

எங்கள் நூலாகிய வேதாகமங்கள், இறைவன் ஒருவன் கால எல்லையைக் கடந்து என்றுமே உள்ளான்' எனக் கூறுதலால், அந்த நூற் பிரமாணத்தை நீவிர்கூறிய யுக்திவாதங்களைக் கொண்டு மறுத்தல் கூடாது' என்று நீ கூறினால்,

உங்கள் நூலாகிய வேதாகமங்களைச் செய்தார் யாவர்? 'இறைவன்' என யாம் இதுகாறும் கூறிவந்த அவனே அவற்றைச் செய்தான் எனின், இறைவனையும், அவன் செய்த நூல் வேதாகமங்கள் என்பதையும் முன்னே அறிந்து, பின்னர் 'வேதாகமங்கள் பிரமாணம்' எனக் கொண்டாயோ, அல்லது 'வேதாகமங்கள் பிரமாணம்' என்பதை முன்னே அறிந்து, பின்னர் அவைகளைக் கொண்டு, இறைவன் உண்டு என்று அறிந்தாயோ? இறைவனை அறியாமல், 'வேதாகமங்கள் பிரமாணம்' என அறிதல் கூடாது; 'வேதாகமங்கள் பிரமாணம்' என அறியாமல் இறைவனை அறிதல் இயலாது. இவை 'ஒன்றனை ஒன்று பற்றுதல்" என்னும் குற்றம் உடையவாய், இரண்டுமே போலியாய் ஒழியும்.

இதற்கு அஞ்சி, 'வேதாகமங்கள் ஒருவராலும் செய்யப்படாமல், இறைவனைப்போலவே அநாதியாய் உள்ளன' எனக் கூறுவையாயின், செயற்கைப் பொருளாகிய, 'நூல்' என்பது, ஒருவ

ராலும் செய்யப்படாமலே இயற்கையாக உள்ளது என்றல், 'தாமரைமலர் வாவி குளங்களிற்போல ஆகாயத்திலும் உளது' என்றல்போல அசம்பாவிதமாம் (இல்லது கூறுதலாம்) ஆகவே உங்கள் வேதாகமங்களைக்கொண்டு, 'இறைவன் உண்டு' எனச் சாதிக்க முயலுதல் அறியாமையாகவே முடியும்.

## விளக்கம்

செய்யுள் நோக்கிப் பொருள்களை முன் பின்னாகக் கூறினர். "அழகிதாம்" என்பதும், "ஆச்சரியமாம்" என்பது புகழ்வது இகழ்தல்.

"உலகினைப் படைத்தான் என்றுய்" என்பது முதலாக இவ் ஏழு செய்யுட்களாலும், 'உலகிற்கு அதனைப்படைத்த தலைவன் உண்டு' எனக்கூறும் கடவுட் கொள்கையுடையாரை அவர் மறுக்குமாறு கூறப்பட்டது.

இனி, முன்பு அவர் எடுத்துக் கூருத சில சிறிய பொருள்களையும் அவர் கூறுமாறு கூறுகின்ருர். (27)

(தொடரும்)

---

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

I have been very happy to pay a visit to this temple. It is a source of inspiration. It is surpasingly kept very neat and clean. We all feel grateful for the blessings.

(Sd.) B. C. MISRA,

12—12—75. Judge, High Court of Delhi.

# தேவார வைப்புத் தலங்கள்

## திருநாவுக்கரசர்

(மலர் 34. இதழ் 11. பக்கம் 509 - இன் தொடர்ச்சி)

[ எண்கள் முறையே, திருமுறை-பதிகம்-பாடல்களைக் குறிப்பன. ]

| | தலம் | பதிக எண் | இருப்பிடம் |
|---|---|---|---|
| 81 | ஞாழற்கோயில் | 6-71-5 | பாடல்பெற்றதலமாகிய திருப்பா திருப்புலியூர் ஆதல் கூடும். |
| 82 | தக்களூர் | 6-2-1 | காரைக்கால் பகுதியில் உள்ள பாடல்பெற்ற தலமாகிய திருநள்ளாற்றிற்கு அருகில் ஒரு மைல் தொலைவிலுள்ள சிற்றூர். |
| 83 | தஞ்சை | 6-70-8 | மருகல் நாட்டுத் தஞ்சை இக்காலத்துக் கீழைத்தஞ்சாவூர் என்று வழங்கப்படுகிறது. |
| 84 | தஞ்சைத்தளிக்குளம் | 6-51-8<br>6-71-10 | வெண்ணிநாட்டுத், தஞ்சை தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் முன்னையநிலை முதல் இராசராசன் காலத்துக்கு முன்னரே தஞ்சை தளிக்குளம் என்ற ஓர் கோயில் இருந்திருக்கிறது என்பதனை திரு. சதாசிவ பண்டாரத்தார் ஆய்ந்து எழுதுகிறார். சோழர் வரலாறு முதற்பாகம். |
| 85 | தண்டலையாலங்காடு | — | தலையாலங்காடு என்ற பாடல்பெற்ற சிவத்தலம். தண் என்பது அடைமொழி. |
| 86 | தண்டலை | 6-51-9 | திருவாரூருக்கு மேற்கே ஒரு மைல் தொலைவில் உள்ள 'தண்டலை நீணெறி' என்ற பாடல்பெற்றசிவத்தலமாகலாம் |

| | தலம் | பதிக எண் | இருப்பிடம் |
|---|---|---|---|
| 87 | தவத்துறை | 6-71-11 | 'பண்டெழுவர் தவத்துறை' என்பது அப்பர்தேவாரம். திருச்சி மாவட்டம் 'லால்குடி' திருத்தவத்துறை என வழங்கப் பெற்றிருக்கிறது. |
| 88 | தவப்பள்ளி | 6–71–1 | தவமுனிவர்கள் இருப்பிடமாகத் தெரிகிறது. விளக்கமில்லை. |
| 89 | தளிச்சாத்தங்குடி | 6-25-10 | பெருவேளூருக்குத் தென் பக்கத்திலும் மணக்காலுக்கு வடபுறத்திலும் உள்ள சிற்றூர். |
| 90 | திங்களூர் | 6–25–3 | திருவையாற்றுக்கு அருகிலுள்ள பாடல்பெற்ற சிவத்தலமாதல் வேண்டும். அப்பூதி அடிகள் அவதரித்தருளியதலம். |
| 91 | திண்டீச்சரம் | 6–7-8<br>6–70-9 | 'ஒய்மா நாட்டுக் கிடங்கில் திருத்திண்டீசுவரம்' என்று கல்வெட்டுக் குறிக்கும். தற்காலத்துத் திண்டிவனம். |
| 92 | திரிபுராந்தகம் | 6–7–5 | ஆந்திர மாநிலம் - கர்னூல் மாவட்டத்தில் உள்ள சிற்றூர். |
| 93 | திருக்குளம் | 6-71-10 | – விளங்கவில்லை. |
| 94 | திருவேட்டி | 6–7–7 | சென்னை திருவல்லிக்கேணிப் பகுதியைச் சார்ந்த திருவேட்டீசுவரன்பேட்டை என்பர். |
| 95 | துடையூர் | 6-71–4 | திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள துறையூர். திருப்பாச்சிலாச்சிரமத்திலிருந்து மூன்றுமைல் என்பர் திரு. செங்கல்வராயபிள்ளை. இங்குள்ள கோயில் கடம்பந்துறை. |
| 96 | துவையூர் | 6–71–4 | 'நல்துறையூர்' என அப்பர் சுந்தரர் பாடிய திருத்துறையூராதல் வேண்டும். |

| தலம் | பதிக எண் | இருப்பிடம் |
|---|---|---|
| 97 தெள்ளாறு | 6-71-10 | வடார்க்காடு மாவட்டத்திலுள்ள 'தெள்ளாறு' என்ற ஊராக லாம். வரலாற்றில் தெள்ளாற் றுப் பெரும்போர் பற்றிய குறிப்பு உண்டு. |
| 98 தென்களக்குடி | 6-71-3 | பாண்டிய நாட்டில் களக்குடி நாட்டின் தலைநகர். கரவந்த புரம் என்று வழங்குகிறது. |
| 99 தேருர் | 6-25-3 | – விளங்கவில்லை. |
| 100 தேவன்குடி | 6-7-1<br>6-70-1<br>6-71-3 | திருந்துதேவன்குடி என்ற பா டல் பெற்ற தலமா, அன்றி வேறு என்பதுவிளங்கவில்லை. |

ஆதாரம் :- பன்னிரு திருமுறை வரலாறு – முதற்பாகம்.
திரு. க. வெள்ளைவாரணனூர்.

தகவல் :- இரா. செல்வக்கணபதி.

---

## பார்வையாளர் குறிப்பு

தருமையாதீனம்

**ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி.**

சீரிய முறையில் பேணப்படும் இச் சிறப்புமிக்க கோயில் உள்ளத்தைத் தொடுகின்றது.

(Sd.) தனலக்குமி பாலசுந்தரம்
தமிழ்த் துணைப்பேராசிரியர்,
இராணிமேரி கல்லூரி, சென்னை.

(Sd.) RAJMOHAN,
R. D. O. Pattukottai.

(Sd) C. BALASUNDARAM,
Bio. Chemist. Dept. of Casdiology
G. H. Madras - 3

14—1—76

# திருக்குருகாவூர்—திருக்கோலக்கா

## திருக்குருகாவூர்

சோழவளநாட்டில் காவிரியின் வடகரையில் சீகாழிக்குக் கிழக்கே தென்திருமுல்லைவாயிலுக்குப் போகும் பெருந்துச்சாலையில் மூன்றுகல்தொலைவில், பெருந்துச்சாலையிலிருந்து தெற்கே அரைகல் அளவில் விளங்குவது திருக்குருகாவூர். ஊர்ப்பெயர் குருகாவூர்; கோயிற்பெயர் வெள்ளடை. வெள்ளடை என்ற சொல்லுக்குப் பரமாகாயம் என்பது பொருள். இறைவன் பரமாகாய வடிவினனாக இங்கு விளங்குகிறான் எனப் பொருள்படும். "வேதனை தீர்தரும் வெள்ளடை" என்பது திருமந்திரம். (1157). இச்சொல் வெள்விடை என்பதன் மரூஉவாகவும் இருக்கலாம்.

இறைவர் திருப்பெயர் ஸ்ரீ வெள்ளடைநாதர். இறைவி திருப்பெயர் ஸ்ரீ காவியங்கண்ணி. இத்திருப்பெயரைத் திருஞானசம்பந்தப் பெருந்தகையார் "காவியங்கண்ணி மடவாளொடும் காட்டிடைத் தீயகல் ஏந்தி நின்றாடுதிர்" என இவ்வூர்ப் பதிகத்துள் குறிப்பிடுகின்றார்.

தீர்த்தம் – பால்கிணறு. இது திருக்கோயிலுக்குவெளியே இருக்கிறது. தை அமாவாசையில் சுவாமி தீர்த்தம் கொடுக்கும் சமயத்தில் இக் கிணற்றுநீர் பால் நிறமாக்மாறும் அதிசயம் பொருந்தியது.

### பொதிசோறளித்தவர் :

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அடியவர் திருக்கூட்டத்துடன் சீகாழிப் பதியிலிருந்து குருகாவூர்நோக்கிஎழுந்தருளினார். தம்மை வழிபடவரும் வன்றொண்டர் பசியாலும் நீர்வேட்கையாலும் வருந்துதலை உணர்ந்த சிவபெருமான் வழியிடையே மறையவர் வடிவோடு தண்ணீரும் பொதிசோறும்கொண்டுவந்து, வெயில் வெப்பம்நீங்க நிழல்தரும்பந்தர் ஒன்றையும் உண்டாக்கி, ஆரூரர் வரவை எதிர்நோக்கியிருந்தார். அடியார்களோடு அங்கு வந்த சுந்தரர் ஐந்தெழுத்தோதி அப் பந்தரில் தங்கினார். சிவபிரான் அவரைநோக்கி 'நீவிர் மிகவும் பசியுடையவராக உள்ளீர்! யான் கொண்டுவந்த இப்பொதிசோற்றினை உண்டு இளைப்பாறுவீராக' என்றார். சுந்தரரும் அதற்கு இசைந்து அவர் அன்போடு

தந்த பொதி சோற்றினை அடியார்களுடன் உண்டார். ஏனைய பரிசனங்களையும் உண்ணும்படிசெய்தார். பொதிசோறு குறை யாது பெருகியது. சுந்தரர் மறையவரைப்பாராட்டி இளைப்பாறித் துயில்கொண்டார். அடியவர்களும் உறங்கினர். மறையவராய் வந்த இறைவன் பந்தரோடு மறைந்தருளினர். துயிலுணர்ந் தெழுந்த சுந்தரர் மறையவரைக்காணாது அதிசயித்து இவ்வாறு வந்து அருள்புரிந்தவர் குருகாவூர் இறைவரே எனத் தெளிந்து " இத்தனையாமாற்றை " எனத் தொடங்கித் திருப்பதிகம் பாடிக் கொண்டே திருக்கோயிலுக்குச் சென்று உணவளித்து உயிர் காத்த பெருமானைப் போற்றிப் பரவினர். இப்பதிகத்தில், பெரு மான் தமக்குப் பொதிசோறளித்த சிறப்பினை,

" ஆவியைப் போகாமே தவிர்த்தென்னை ஆட்கொண்டாய் "

" பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய் "

என்னும் தொடர்களால் குறிப்பிடுகிறர். தொண்டர்களுக்கு அமுதூட்டிய இடம் 'வரிசைப்பற்று' என்னும்பெயரால் வழங்கப் பெறுகிறது. இறைவன் கட்டமுதளித்த இவ்விழா ஒவ்வொரு ஆண்டும் சித்திரைப் பௌர்ணமியில் மிகச் சிறப்பாகக் கொண் டாடப்பெறுகிறது.

இத்தலத்திற்குச் சம்பந்தர் பதிகம் ஒன்று ; சுந்தரர் பதிகம் ஒன்று ; ஆக இரண்டு திருப்பதிகங்கள் உள்ளன. இவ்வூர்க் கோயிலில் இராசேந்திரசோழன் I, குலோத்துங்கன் I, விக்கிரம சோழன், பரகேசரிவர்மனுகிய குலோத்துங்கசோழன், இராஜாதி ராஜதேவன் ஆகியோர் காலத்துப் பொறிக்கப்பெற்ற கல்வெட் டுக்கள் உள்ளன.

இக்கல்வெட்டுக்களில் இறைவர், திருக்குருகாவூர் திருவெள் ளடை மகாதேவர், திருக்குருகாவூர் வெள்ளடை ஆண்டார், வெள்ளடையப்பர் எனக் குறிக்கப்பெற்றுள்ளார்.

திருமேனிகள் பிரதிமங்கள் :- குலோத்துங்கசோழதேவர் காலத்தில் மூவர் திருவுருவங்கள் கோயிலில் எழுந்தருளுவிக்கப் பெற்றன. சாத்தன்மண்டை என்பவர் சந்திரசேகரர் திருவுரு வத்தை எழுந்தருளச்செய்தார்.

திருமடம் :- இவ்வூரில் திருச்சிற்றம்பலமுடையாள் மடம் என்னும் பெயருடைய மடம் ஒன்றிருந்தது. அதில் மாகேஸ்வரர் களுக்கும், அபூர்விகளுக்கும் உணவளிக்கும்பொருட்டு திருச்சிற் றம்பலமுடையானை விழுப்பரையன் நிலமளித்துள்ளான் என்ற

செய்தி விக்கிரமசோழனின் ஐந்தாம் ஆண்டுக் கல்வெட்டால் அறியப்படுகிறது.

திருக்குருகாவூர் இராசாதிராசவள நாட்டுத்திருவாலி நாட்டுக் குருகாவூர் எனக் கூறப்பட்டுள்ளது.

## திருக்கோலக்கா

சோழவள நாட்டில் காவிரியின் வடகரையில் சீகாழிக்கு மேற்கே ஒருகல் தொலைவில் விளங்குவது இத்தலம். திருஞான சம்பந்த சுவாமிகளுக்கு இறைவன் பொற்றாளம் வழங்கிய தல மாதலின் திருத்தாளம் உடையார் கோயில் எனவும் இதனை வழங்குவர்.

இறைவன் திருப்பெயர் ஸ்ரீசப்தபுரீசுவரர். இறைவி திருப் பெயர் ஸ்ரீஓசைகொடுத்தநாயகி கிழக்குப்பார்த்தசந்நிதி. கோயில் வாயிலில் தீர்த்தம் இருக்கிறது. சீகாழி திருமுலைப்பால் திருவிழா நாளன்று மாலையில் திருஞானசம்பந்தர் இத்தலத்திற்கு எழுந் தருளுவார். இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்று; சுந்தரர் பதிகம் ஒன்று; ஆக இரண்டு திருப்பதிகங்கள் உள்ளன.

### இறைவர் பொற்றாளம் வழங்கியது :

உமையம்மையார் அளித்த சிவஞானப் பாலடிசிலை உண்டு திருநெறிய தமிழ் பாடியருளிய ஞானசம்பந்தர் தமது திருமாளி கையை அடைந்து அன்றிரவு இறைவன் திருவருளையே எண்ணி விருந்து மறுநாள் திருக்கோலக்கா இறைவனைப் பாடிப்பரவும் விருப்புடன் திருக்கோலக்காவிற்குவந்தார். இறைவன் திருமுன் நின்று "மடையில்வாளை" எனத் தொடங்கும் திருப்பதிகத்தைத் தம் மெல்லியகைமலர்களால் தாளமிட்டு ஒத்தறுத்துப் பாடினர். அதனைக்கண்ட இறைவர், பிள்ளையார் கைகள் வருந்தும் என்று எண்ணி திருவைந்தெழுத்து பொறிக்கப் பெற்ற பொன்னாலாகிய திருத்தாளத்தினை ஞானசம்பந்தர் கைகளிலேவந்து பொருந்து மாறு அளித்தருளினர். ஞானசம்பந்தரும் இறைவனருளால் பெற்ற அத்தாளத்தினைத் தலைமேற்கொண்டுபோற்றி, மகிழ்ந்து ஏழிசையும் தழைத்தோங்க அவ்வின்னிசைத் திருப்பதிகத்தைத் தாளத்துடன் பாடியருளினர். இறைவனருளிய பொற்றாளத் திற்கு அம்பிகை ஓசைகொடுத்தாள் எனக்கூறுவர். அதற்கேற்ப அம்மை ஓசைகொடுத்தநாயகி என வழங்கப்பெறுகின்றார். இவ் வரலாற்று நிகழ்ச்சியைச் சுந்தரரும் தம் தேவாரத் திருப்பதிகத் துள் "நாளும் இன்னிசையால்" என்ற பாடலில் குறித்தருளு கின்றார்.

# செய்திகள்

## ஸ்ரீ மௌனகுரு, ஸ்ரீ தாயுமான சுவாமிகள் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீன அருளாட்சியில் திகழும் திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை மௌன மடத்தின் முதல்வர் ஸ்ரீ மௌன குருவிற்கும், அவர்களிடம் அருளுபதேசம் பெற்று அருளனுபூதிப் பாடல்கள் பலவற்றையும் அருளிய ஸ்ரீ தாயுமான சுவாமிக்கும், இருவரும் திருவருட்பேறெய்திய விசாக விண்மீன் கூடிய, நிகழும் இராட்சச ஆண்டு தைத்திங்கள் 11 ஆம் நாளுக்கு நேரான 25—1—76 ஞாயிற்றுக்கிழமையன்று திருச்சி மௌன மடத்தில் குருபூஜை விழா தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளப் பாங்கின் வண்ணம் சிறப்பாக நடந்தேறியது.

அன்று. குருபூஜை விழாவை ஒட்டி திருச்சி மலைக்கோயில் ஸ்ரீ மாணிக்க விநாயகருக்கும், ஸ்ரீ உச்சிப்பிள்ளையாருக்கும், ஸ்ரீ மட்டுவார்குழலம்மை உடனுறை ஸ்ரீ தாயுமான சுவாமிக்கும், ஸ்ரீ மௌனகுரு, ஸ்ரீ தாயுமானவருக்கும் காலை 10 மணி அளவில் விசேஷ அபிஷேக ஆராதனைகளும், நண்பகல் மௌனமடத்தில் மாகேசுவரபூசையும் நடைபெற்றன.

அன்று மாலை 6 மணி அளவில் திருச்சி மலைக்கோட்டை நூற்றுக்கால் மண்டபத்தில் இவ்விழாவின் அங்கமாக 'வழக்காடு மன்றம்' ஒன்று நடைபெற்றது. வித்துவான். தவத்திரு. மௌன. மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அனைவரையும் வரவேற்றார்கள். திருக்குறள்மணி. திரு. ஜி. வரதராஜபிள்ளை பி. ஏ., அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தினார்கள்.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி (பொறுப்பு) முதல்வர், தருமையாதீனத் தமிழ்ப் புலவர், திருநெறிச் செம்மல், நல்லிசைப் புலவர், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் பி. ஏ., அவர்கள் வழக்காடு மன்றத்தின் நடுவராக அமைந்தார்கள்.

'தாயுமானுர் காட்டிய நெறிநில்லாச் சமுதாயம் குற்றம் உடையதே' என்று புலவர். திரு. இரா. செல்வக்கணபதி பி. ஏ., அவர்கள் வழக்குத் தொடுத்தார். மாயூரம், அ. வ. அ. கல்லூரித்

தமிழ்த் துணைப் பேராசிரியர், திரு. அ. கலியபெருமாள் எம். ஏ., அவர்கள் எதிர் வழக்கிட்டார். இரு திறத்து வாதங்களையும் ஆராய்ந்து, 'தாயுமானார் நெறி நில்லாச் சமுதாயம் குற்றம் உடையதே' என நடுவர் தீர்ப்பு வழங்கினார்.

நூற்றுக்கணக்கான அன்பர்கள் காலை குருபூசையிலும், மாலை வழக்காடு மன்றத்திலும் கலந்துகொண்டு வழிபட்டும், கேட்டும் பயன்பெற்றனர். வழக்காடு மன்ற நிகழ்ச்சியைத் திருச்சி அனைத்திந்திய வானொலி நிலையத்தார் பதிவு செய்து 3—2—76 செவ்வாய்க்கிழமை இரவு மணி 8-10முதல் 8-30வரை 'ஒலிஉலா' என்ற பகுதியில் ஒலிபரப்பினர்.

## குறுக்கையில் மின்விளக்கேற்று விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான குறுக்கை ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி திருக்கோயிலில், வழிபாட்டிற்குவரும் பக்தர்களின் நலன் கருதி, தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின்வண்ணம் மின் விளக்குகள் அண்மையில் பொருத்தப்பட்டன. அம்மின்விளக்கு ஏற்றுவிழா 6—2—76 வெள்ளிக்கிழமை மாலை 6 மணி அளவில் சிறப்பாக நடைபெற்றது. அவ்விழாவை முன்னிட்டு அன்று உச்சிக்காலத்தில் சுவாமி அம்பாள் முதலிய மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் மாலையில் சைவப் பெருமக்கள் உபயமாக சுவாமிக்கும் சம்ஹாரமூர்த்திக்கும் பஞ்சமுகார்ச்சனையும், அம்பாளுக்கு சந்தனக்காப்பும் நவசத்தி அருச்சனையும் சிறப்புற நிகழ்ந்தன.

மின்விளக்கு ஏற்று விழாவிற்கு எழுந்தருளிய ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை கட்டளை விசாரணைத் தம்பிரான் சுவாமிகளும், திருக்கோயில் அலுவலர்களும் சிவாசாரியர்களும், சைவப் பெருமக்களும் நாதசுர இன்னிசை முழங்க பூர்ணகும்பம் முதலிய மரியாதைகளுடன் வரவேற்றனர்கள்.

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் எழுந்தருளி வழிபாடாற்றி மின்விளக்கு ஏற்று விழாவிற்கு அருளாசி வழங்கினார்கள். (ஆசியுரை தனியே வெளியிடப்பெறும்.) பின்னர், நாகப்பட்டினம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைத் துணை ஆணையர் திரு. ஆர். அர்ஜுனன் பி. ஏ., அவர்கள் மின் விளக்குகளை ஏற்றிவைத்துச் சிறப்புரையாற்றினார்கள். விழாத் தொடக்கத்தில் தேவாரத் திருப்பதிகப் பாராயணம் நிகழ்த்தப்

பெற்றது. விழா, நன்றியுரை இறைவாழ்த்துக்களுடன் இனிது நிறைவெய்தியது.

சீகாழியில்

## கல்வெட்டுத் திறப்பும் புஷ்பாஞ்சலியும்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ திருநிலைநாயகி அம்மைக்குப் புஷ்பாஞ்சலியும் அம்மை சந்நிதியில் பதிக்கப்பெற்ற காழிக்கோவைக் கல்லெழுத்துத் திறப்பு விழாவும் 30—1—76 தை வெள்ளிக்கிழமையன்று மாலை சிறப்பாக நடைபெற்றது. சீகாழி திரு. கி. அருணாசல முதலியார், மகாவித்துவான், மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால் பாடப்பெற்ற சீகாழிக்கோவை என்ற நூலில் திருஞானசம்பந்தர் தொடர்பாக உள்ள பாடல்களைத் தொகுத்து சலவைக் கல்லில் பதித்துள்ளார்கள். அதில் மூன்று தேவாரப் பாடல்களும் இரண்டு அபிராமி அந்தாதிப் பாடல்களும் இடம் பெற்றுள்ளன. கல்லெழுத்துத் திறப்பு விழாவை முன்னிட்டு திருநிலைநாயகியம்மைக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் புஷ்பாஞ்சலியும் திரு முதலியார் அவர்கள் உபயமாக நிகழ்ந்தன.

புஷ்பாஞ்சலி வழிபாடு பல திருக்கோயில்களில் நிகழ்ந்திருப்பினும் சீகாழியில் முதன்முறையாக நிகழ்த்தப்பெற்றது. அம்பாள் மீது புஷ்பாஞ்சலியாகத் தூவப்பெறும் மலர்கள் கீழேசரியாமல் இருப்பதற்கு 'ஓம்' என்ற எழுத்துவடிவில் அமைக்கப்பெற்ற தட்டியை முன்னர் வைப்பது வழக்கம். ஆனால் இங்கு நிகழ்த்திய வழிபாட்டில் தட்டிவைக்கப்பெறவில்லை. பெரிய மலர் மாலைகள் வைக்கப்பெற்றுன என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. முதலியார் அவர்கள், தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளை புஷ்பாஞ்சலி வழிபாட்டிற்கு எழுந்தருளி கல்லெழுத்தைத் திறந்து வைத்து அருளாசி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். திருவுளமிசைந்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும் மாலை வழிபாட்டிற்கு எழுந்தருளினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை, கட்டளை விசாரணை ஸ்ரீமத் பொன்னம்பலத் தம்பிரான் சுவாமிகளும் திரு. முதலியார் அவர்களும், சீகாழிப்பெருமக்களும், திருக்கோயில் சிவாச்சாரியார்

களும் அலுவலர்களும் பூர்ணகும்பம் முதலிய கோயில் மரியாதைக ளோடு நாதசுர இன்னிசைமுழங்க வரவேற்ரூர்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்அவர்கள் ஸ்ரீ பிரமபுரீசுவரரையும்,விநாயகர், முதலிய பரிவார மூர்த்திகளையும் தரிசித்து அம்பாள் திருக்கோயி லுக்கு எழுந்தருளி புஷ்பாஞ்சலி வழிபாட்டைத் தொடங்கியருளி ஞர்கள். புஷ்பாஞ்சலி லலிதா திரிசதி அருச்சனுருபமாக நிகழ்ந் தது. திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீமத் காசிவாசி முத்துக் குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகளும் வழிபாட்டில் கலந்து கொண்டு தரிசித்து மகிழ்ந்தார்கள். வழிபாட்டிற்குப் பின்னர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், ஸ்ரீமத் காசிவாசி சுவாமி கட்கும் பெருமக்களுக்கும் பக்தர்களுக்கும் திருவருட் பிரசாதம் வழங்கியருளினர்கள். திரு. அருணுசல முதலியார் அவர்கட்கு அம்மை சந்நிதியில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பொன்னுடை போர்த்தி அருளாசியுடன் திருவருட் பிரசாதம் வழங்கியருளினர்கள்.

அடுத்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அம்மை சந்நிதியில் பதிக்கப்பெற்றுள்ள காழிக்கோவைக் கல்வெட்டைத் திறந்து வைத்தருளினர்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர் கட்கு திரு. முதலியார் அவர்கள் பொன்னுடைபோர்த்தி அருளாசி பெற்ரூர்கள். பின்னர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருஞானசம்பந்தர் திருக்கோயில் வழிபாட்டை முடித்துக் கொண்டு விழா மேடைக்கு எழுந்தருளினர்கள். விழா மேடை அம்மன் கோயிலுக்கு அருகில் சம்பந்தர் கோயிலுக்கு எதிரில் அமைக்கப்பெற்றிருந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்அவர்கள் தனியாக அழகிய முறையில் ஒப்பனை செய்யப் பெற்றிருந்த மேடையில் எழுந்தருளினர்கள். இறைவணக்கத்துடன் விழா தொடங்கியது. திரு. கி. அருணுசல முதலியார் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களையும், ஸ்ரீமத் காசிவாசி சுவாமி களையும் விழாவிற்கு வந்திருந்தவர்களையும் வரவேற்று உரை யாற்றினர்கள். ஸ்ரீமத் காசிவாசிசுவாமிகளும் சிதம்பரம் அறப் பணிச் செல்வர் திரு. கே. அரங்கசாமிப் பிள்ளை அவர்களும் உரையாற்றிய பின்னர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆசியருளினர்கள். தொடர்ந்து திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர், தருமையாதீனப் புலவர் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள் கல்லெழுத்துப் பற்றிய விளக்கவுரை நிகழ்த்தியபின்னர் நன்றியுரை இறைவாழ்த்துக்களுடன் விழா நிறைவுற்றது. பிறகு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வெள்ளிக்கிழமைகளில் ஸ்ரீ சட்டைநாத பெருமானுக்கு நிகழ்த்தப்பெறும் சிறப்பு வழி பாட்டைத் தரிசித்து தருமைக்கு எழுந்தருளினர்கள். (ஆசியுரை பின்னர் வெளியிடப்பெறும்.)

# எதிர்காலம்

ஜோதிஷம். திரு. A. இராசமாணிக்கம்

ஆசிரியர்,

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(இராட்சசஸு மாசிமீ 1ௗ முதல் 30ௗ முடிய)

(13—2—1976 முதல் 13—3—1976 முடிய)

ஸ்ரீ இராட்சஸஸு மாசிமீ 1ௗ சுக்கிரவாரம் புனர்பூச நக்ஷத்ரத்தில் அன்று உதயம் முதல் 1 நாழிகை 40 விநாடிக்கு கும்ப லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரிய பகவான் கும்பராசி சங்கிரமணமாக மாசிமாதப் பிரவேசம் செய்கிறார். அதன் பலன் ஸ்ரீ சிவசக்தியின் அருளால் உலகெங்கும் ஜீவன்களின் போஷகார்த்தமாக ஸஸ்யதானிய பயிர்கள் விருத்தியடையும். உலக நாடுகளின் வல்லரசுகள் சமரஸ பான்மையுடன் அஹிம்சா பரிபாலன முறையை வகுப்பார்கள். தேசங்களில் எங்கும் பொருள்களின் விலைவாசி மலிவு ஏற்பட்டு பிரஜைகள் சௌகரிய வாழ்க்கை நடத்துவார்கள். திருமடங்கள் ஆசாரிய பீடங்களின் அதிபர்களால் ஆற்றிவருகின்ற ஆஸ்திக பிரசாரம் அகில உலகமும் பரவும். தேவாலயங்களில் சிறப்பு ஆராதனைகள், வேத பிராமணர்களால் வேதமந்திரங்கள், வேள்விகள் சிறக்க, உலகம் உய்யும். பிரஜைகள் குருபக்தி, தெய்வபக்தி, தேசபக்தி பற்றி க்ஷேமகரமாக வாழ்வார்கள்.

## குரு பெயர்ச்சி

குறிப்பு :— ஸ்ரீ இராட்சஸஸு மாசிமீ 13ௗ புதவாரம் பூராடநக்ஷத்திரம் ஆகிய தினத்தில் உதயம் முதல் 21 நாழிகை 52விநாடிக்கு கடக லக்கினத்தில் குருபகவான் மீனராசியிலிருந்து மேஷராசிக்குப் பெயர்ச்சியடைகிறார். பிரகஸ்பதியாகிய அவர் தன்மையால் தேவகுரு என்னும் மானிடர்களுக்கு அவர் ஆதிக்கம் வருகிற காலத்தில் அவர் பணத்துக்கு அதிபதியாகி பிரபுத்துவம் இராஜரீக செல்வாக்கு, போஷகம், அந்தஸ்து ஆகியவற்றை அளிப்பதின் காரணமாக ஜோதிஷ சாஸ்திரத்தில் இராஜா

என்றும் பெயர் பெறுகிறார். அவர் ஆதிக்கத்தில் தெய்வத்திருவருள் மிகுந்து காணும். அவர் இராசி மண்டலத்தில் ஒரு இராசிக்கு ஒரு ஆண்டாக சஞ்சரிப்பார். துவாபரயுக அந்தமும் கலியுக ஆரம்பமுமாகிய காலமுதல் மேஷராசியில் தொடங்கி இராசிமண்டலத்தை சுற்றிவந்துக்கொண்டிருக்கிறார். அவர் ஒரு முறை இராசி மண்டலத்தை சுற்றிவர 12 ஆண்டுகள் செல்லும். அப்படி பல பகணங்கள்கடந்து இவ்வாண்டு மீனராசியிலிருந்து ஆரம்பமாகிய மேஷராசியில் பெயர்ச்சியடைகிறார்.

குருபகவான் இவ்வாண்டு கேதுவுடன் சம்பந்தம் அடைகிறார். அதன் பலன் விஞ்ஞான உலகில் உபயோகப் பொருள்கள் பலவெளிவரும். இயந்திரங்களின் உற்பத்தி அதிகரிக்கும். மக்கள் குறைந்த உழைப்பில் அதிக பொருளையீட்ட முயல்வார்கள். தவசிகள் ஞானிகளுக்கு சித்து புரியும் குணம் மேலிடும்.

இவ்வாண்டு குருபெயர்ச்சி மிதுனம், சிம்மம், துலாம், தனுசு மீனராசிகளுக்கு சுபத்துவ கல்யாணாதி நற்பலன்களை அளிக்கும். மேஷம், ரிஷபம், கடக ராசிகளுக்கு ஞானக்கேள்வி, தெய்வ சிந்தனை இரஸவாதம் முதலியவற்றில் முயற்சி, தீர்த்தயாத்திராடனம், பொது நல ஈடுபாடு ஆகியவற்றில் செலுத்தும். கன்னி, விருச்சிகம், மகரம் கும்ப ராசிகளுக்கு மோதிர கையால் குட்டுபடல், இடமாற்றம், வியாஜ்ஜியம், தனக்கும் குடும்பத்தினருக்கும் வெப்பாதிக்க நலி ஆகிய பலன்களாக நடந்துவரும். எல்லா இராசிகளுக்கும் ஸ்ரீ அனந்தீஸ்வரரை வழிபட பாபங்கள் விலகும்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை $\frac{1}{4}$

( சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ. – அ. )

மேஷ ராசி 9 பாதங்களும் இம்மாதம் சுப பலனாக நடக்கும். குடும்பத்தில் பண ஆதாயமும் வாழ்க்கை சௌகரியமும் திருப்திகரமாக இருந்துவரும். மனோதிடமும் திட்டமிட்டு செயல்புரியும் ஆற்றலுமேற்படும். வீடு, வாகனம், பூமி இவற்றின் ஆக்கமேற்படும். சகல காரியங்களிலும் ஜெய பிராப்தியும் தெய்வானுக்கிரக உயர்வும் ஏற்படும். செய்தொழில் அல்லது. உத்தியோகத்தில் அரசாங்க பிராபல்யத்தைக்கொடுக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை$\frac{3}{4}$ – உரோகிணி – மிருகசீர்ஷம் $\frac{1}{2}$

( இ. ஊ. ஏ. – ஓ. வ. வி. வூ. – வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். தனம் வரவும் செலவும் சரிசமனாகும். வாக்கு பலன் சமூக வெறுப்பாகும். தற்காலம் மௌனம் நலம் தரும். வீடு வாகனங்களில் நற்

பலனும் புத்திரர்களுக்கு மேன்மை ஸ்திதியும் ஏற்படும். ஆயினும் சில சமயங்களில் பற்றற்ற ஞானசிந்தனையாக இருக்கும். எல்லா காரியங்களும் பிறர் நலம் கருதி செயல்படும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் 17உ க்குமேல் புதிய நிலைமை ஏற்படும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

## 3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

( கா. கி. – கு. க. ங. ச்சா. – கே. கோ. ஹ. )

மிதுன ராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனை நடக்கும். தன தானிய வரவு குறைவின்றி இருந்து வரும். சகோதரர்களுக்கு சுக சௌகரியமும் வாழ்க்கை வசதிகளும் பெருகும். வீடு மனை விஷயமாக ஒரு மாறுதல் வழி ஏற்படும். 13 உ குரு பெயர்வதால் சுப நிகழ்ச்சிகள், வரதட்சிணை பெறுதல், கன்யம் ஆகிய நற்பலனும் பெறும். செய் தொழிலில் இலாபம் கிடைக்கும். செவ்வாய் புதன் சுபமாகும்.

## 4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

( ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. – டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனை நடக்கும். தன தானிய வரவு திருப்திகரமாக இருந்து வரும். கண் நுரையீரல் ஆகிய உறுப்புக்களில் நலிகண்டு குணமாகும். 17 ஆம் தேதி அளவில் ஆரோக்கியம் ஏற்படும். மற்றும் சகல காரியங்களிலும் சிலாக்கியமான பலன்களாக நடந்துவரும். வாக்குப் புனித உரையாடல்கள், சபா மன்றங்களில் தலைமை தாங்குதல் பொது ஸ்தாபனங்கள் நிறுவுதல் மேற்பார்வையிடல் ஆகிய அந்தஸ்துக்களை ஏற்படுத்தும். செய் தொழில் அல்லது உத்தியோகத்தில் கடமைப் பணி நடந்து வரும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

## 5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

( ம. மி. மு. மெ. – மோ. டா. டி. டு. – டே. )

சிம்மராசி 9 பாதங்களும் இம்மாதம் சுப பலனைத்தரும். குடும்பத்தில் தன தானிய வரவு, வாழ்க்கை வசதி பெருகும். பந்துமித்திரர்கள் அனுசரணையும் மேலோர் பெரியோர் ஆசியும் தெய்வ பலமும் ஏற்படும். ஒரு புத்திரபாக்கியம் ஏற்படும். வியாஜ்ஜிய வழக்குகள் வெல்லும். தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சி நிலவும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் முன்னேற்றம் ஏற்படும். சனி ஞாயிறு சுபமாகும்.

**6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½**

( டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. – பே. போ. )

கன்னியா ராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனுக நடக்கும். தன வசதி குடும்பநலம் மேலாக இருந்து வரும். பந்து அம்மான் புத்திரர்களால் செலவு அதிகரிக்கும். சதிபதிகளுக்குள் வீடு மனை விஷயத்தில் குழப்பங்கள் ஏற்பட்டு தெளிதல் ஆகும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் சிரமம் தோன்றினும் தெய்வ பலத்தால் காரியங்கள் திறம்பட நடத்துவரும். எல்லா விஷயங்களிலும் நன்மை ஏற்படும். இம்மாதம் சனிக்கிரகபிரீதி செய்ய நலம் தரும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

**7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾**

( ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே. )

துலாராசி 9 பாதங்களும் இம்மாதம் சுமார் பலனுக நடக்கும். திடீரென பணவருவாய் ஏற்படும். வீடு மனைகளில் ஒப்பந்தங் களில் நற்பலன் ஏற்படும். புத்திர கிலேசம் ஒருபுறம் இருப்பினும் தெய்வ பலத்தாலும் திடசித்தத்தாலும் காரியங்கள் நடைபெறும். வயிற்றளவு வந்து உடன் வைத்தியத்தால் குணமாகும். செய் தொழில் அல்லது உத்தியோகத்தில் நன்மை உண்டாகும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

**8. விருச்சிகம் - விசாகம் ¼ - அனுஷம் – கேட்டை.**

( தோ. – ந. நி. நு. நெ. - நோ. ய. யி. யு. )

விருச்சிகராசி 9 பாதங்களும் இம்மாதம் முற்பகுதியில் நற் பலனும் பிற்பகுதியில் சுமார் பலனுமாக இருக்கும். கையில் தாராளப் பண புழக்கமும் சௌகரியமும் இருந்துவரும். சிலரால் சில அல்லல் பிரச்சினைகளும் இருக்கும். வீடு வாகனங்களின் சௌகரியம் புத்திரர் புத்திரிகளின் சௌகரியம் மேன்மை ஸ்திதி யில் இருந்து வரும். கணவன் மனைவிக்குள் பரஸ்பரம் நிலவும் ஸ்திரீ தனம் அல்லது போக்கிய வஸ்துவின் பிராப்தி ஏற்படும். உத்தியோகத்தில் கிரியா சாதனைகளை ஏற்படுத்தும். சனி ஞாயிறு சுபமாகும்.

**9. தனுசு - மூலம் – பூராடம் – உத்திராடம் ¼**

( யே. யோ. பா. பி. – பு. த. ப. ட. – பே. )

தனுர் ராசி 9 பாதங்களும் இம்மாதம் சுமார் பலனுக நடந்து வரும். தன வசதி ஜீவனோபாயம் இவற்றில் கண்யம் நிலவும். சகோதரர்களின் வித்துவத்துறையில் சிறப்பும் பொருளாதார மும் ஏற்படும். 13உ க்கு மேல் சில பயனுள்ள நன்மைகள்

ஏற்படும். ஆயினும் பிற்பகுதியில் சில சச்சரவும் சரீர நலம் பாதிப்பும் வந்து நீங்கும். செய் தொழில் அல்லது உத்தியோகம் சாதாரணமாக இருக்கும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

## 10. மகரம் – உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

( போ. ஜ. ஜி. – கி. கு. கே. கோ. – க. கி. )

மகர ராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். தனச் செலவாணியில் மாத முன் பகுதியைவிட 17உ க்கு மேல் பலவகையில் வருமானம் உண்டுபண்ணும். சகோதர நலம் சாதாரணமாக இருந்துவரும். செவ்வாய் மாறுதலானபின் அதாவது 20உ க்கு மேல் சொந்தமனை நிலம் வாங்கும் பிராப்தி ஏற்படும். முன்பிருந்த குணங்கள் நீங்கும். சகல காரியத்திலும் சித்தியை ஏற்படுத்தும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் புகழ் ஏற்படும். புதன் வியாழன் சுபமாகும்.

## 11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾

( கு. கே. – கோ. ஸ. ஸி. ஸூ. – ஸே. ஸோ. தா. )

கும்பராசி 9 பாதங்களும் இம்மாதம் சுமார் பலனாக நடக்கும். தன தானிய அபிவிருத்தியில் ஓரளவு திருப்திகரமாக இருக்கும். சகோதர நலம் சாதாரணமாகவும் வாழ்க்கையில் மாறுதல் பிரச்சினைகளை உண்டுபண்ணுவதாகவும் இருக்கும். இராசிக்கு கணவன் மனைவியின் சகசன்ய ஒற்றுமையும் சுகபாக்கியமும் புத்திரர்களால் நன்மையும் ஏற்படுவதாகும். இம்மாதம் பிற்பகுதியில் மத்திம பலனாக இருக்கும். இரத்த பித்த மயக்கம் வந்து குணமாகும். செய் தொழில் அல்லது உத்தியோகத்தில் காரிய நிர்பந்தம் ஏற்படும். செவ்வாய்க்கிரக பிரீதி செய்ய நலம் தரும். வெள்ளி சனி சுபமாகும்.

## 12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி

( தி. – து. ஸ. ச. த. – தே. தோ. ச. சி. )

மீனராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். தனம் வரவும் செலவும் சரி சமனாகும். வரவேண்டிய பாக்கிகள் வசூலிப்பதில் சிரமம் தோன்றும். சகோதரர் பந்து அம்மான் விஷயத்தில் சம்பிரதாய செலவும் அரசாங்க நிபந்தனையாலான செலவும் ஏற்படும். வீடு மனை, இயந்திர வாகனங்களில் சங்கட பிரச்சினைகளும் சமாளித்தலும் ஆகும். செய்தொழில் உத்தியோகம் மாறும் ஞாயிறு திங்கள் சுபமாகும்.

---

தருமையாதீனம்

"ஞானசம்பந்தம் பதிப்பகம்"

# புத்தக விலைப் பட்டியல்

சைவமும் தமிழும் தழைத்தினி தோங்கப் பணிபல புரிந்து வரும் தருமையாதீனம் இந்நாள்வரை தமிழ், ஆங்கிலம், சம்ஸ்கிருதம் முதலிய மொழிகளில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 670 நூல்களை வெளியிட்டுள்ளது. இவ்வரிய நூல்களை அன்பர்கள் பலரும் பெற்றுப் பயன் அடைந்து வருகின்றனர்.

தருமையாதீன வெளியீடுகளில் தற்போது சில நூல்களே கைவசம் உள்ளன. அவற்றிற்குரிய விலை விபரம் இவ்விலைப் பட்டியலில் குறிக்கப்பெற்றுள்ளன.

சமயம், சாத்திரம், திருமுறை, இலக்கியம், ஆகமம் போன்ற பல்வேறு துறையைச் சேர்ந்த இவ்வரிய நூல்களை மீண்டும் மீண்டும் பதிப்பித்து வழங்கவும், புதிய நூல்கள் பலவற்றைக் குறைந்த விலையில் வெளியிட்டு உதவவும் திருவுளம்கொண்ட திருத்தருமையாதீனம் இருபத்தாறுவது குருமகாசந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருப்பெயரால் "ஞானசம்பந்தம் பதிப்பகம்" என்ற அறக் கட்டளையை நிறுவி யருளியுள்ளார்கள்.

பட்டியலில்கண்ட நூல்களின் விற்பனைத்தொகை அனைத்தும் "ஞானசம்பந்தம் பதிப்பகத்தையே" சாரும். இத்தொகை பல வேறு துறைகளில் உள்ள நூல்களைப் பதிப்பித்து வெளியிடப் பயன்படுத்தப்பெறும்.

ரூபாய் ஐம்பதுக்கு மேற்பட்ட மதிப்புடைய நூல்களை ஒரே நேரத்தில் வாங்குபவர்களுக்கு 15 சதம் கழிவும், புத்தக விற்பனையாளர்களுக்கு 20 சதம் கழிவும் வழங்கப்படும். வேண்டிய நூல்களுக்கு உரிய தொகையைப் பணவிடை (M. O.) உண்டியல் (draft) மூலம் அனுப்பி நூல்களைப் பெறலாம். V. P. P. வழி நூல்கள் அனுப்ப இயலாது. தபால் செலவுகள் தனி.

இவ்வரிய வாய்ப்பினை அன்பர்கள் பயன் படுத்திக்கொள்ள வேண்டுகின்றோம்.

செயலாளர்,
ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமையாதீனம். — மாயூரம் 609001.
தஞ்சாவூர் மாவட்டம்.

ரூ. பை.

## 1. திருமுறைகள்

### திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் :

| | | | |
|---|---|---|---|
| முதல் திருமுறை (குறிப்புரையுடன்) | ... | ... | 3—50 |
| இரண்டாம் திருமுறை ... | ... | ... | 5—00 |
| மூன்றாம் திருமுறை ... | ... | ... | 5—75 |

### திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் :

| | | | |
|---|---|---|---|
| நான்காம் திருமுறை (குறிப்புரையுடன்) | ... | ... | 8—00 |
| ஐந்தாம் திருமுறை ... | ... | ... | 8—00 |
| ஆறாம் திருமுறை ... | ... | ... | 8—00 |

### சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் :

| | | | |
|---|---|---|---|
| ஏழாம் திருமுறை (குறிப்புரையுடன்) | ... | ... | 8—00 |

### மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

| | | | |
|---|---|---|---|
| எட்டாம்திருமுறை திருவாசகம் - திருக்கோவையார் (குறிப்புரையுடன்) | ... | ... | 9—00 |

### திருமாளிகைத்தேவர் முதலியோர் அருளிய

| | | | |
|---|---|---|---|
| ஒன்பதாந் திருமுறை திருவிசைப்பா - திருப்பல்லாண்டு (குறிப்புரையுடன்) | ... | ... | 5—50 |

## 2. தோத்திர நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| அகத்தியர் தேவாரத் திரட்டு | ... | ... | 0—75 |
| திருஞானசம்பந்தர் அட்டகம் | ... | ... | 1—00 |
| திருவருட்பாத் திரட்டு | ... | ... | 1—00 |
| திருத்தொண்டர் திருவந்தாதி | ... | ... | 0—50 |
| ஆளுடையபிள்ளையார் மும்மணிக்கோவை | ... | ... | 0—25 |
| ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி | ... | ... | 0—25 |
| கோயில் நான்மணிமாலை | ... | ... | 0—25 |
| திருக்கழுமல மும்மணிக்கோவை | ... | ... | 0—25 |
| திருக்கயிலாய ஞான உலா | ... | ... | 0—30 |
| கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி | ... | ... | 0—25 |
| பொன் வண்ணத் தந்தாதி | ... | ... | 0—25 |
| தென்கயிலை வடகயிலைத் திருப்பதிகங்கள் | ... | ... | 0—50 |
| திருவாலவாய்த் தோத்திரத் திரட்டு | ... | ... | 0—25 |
| மதுரைத் திருப்பதிகங்கள் (தலவரலாற்றுடன்) | ... | ... | 2—00 |
| விநாயகர் அகவல் | ... | ... | 0—75 |
| அபிராமி அந்தாதி | ... | ... | 0—25 |

| | ரூ. பை. |
|---|---|
| கந்தர் கலி வெண்பா ... ... | 0—35 |
| சிதம்பரம் திருப்பதிகங்கள் ... ... | 1—50 |
| திருநாரையூர்த் திருப்பதிகங்கள் ... ... | 0—35 |
| தாயுமான சுவாமிகள் பாடல் ... ... | 2—00 |

## 3. சாத்திர நூல்கள்

| | |
|---|---|
| சிவஞானபோதம் (உரை நடையுடன்) ... — | 0—25 |
| சிவப்பிரகாசம் (உரை நடையுடன்) ... ... | 0—25 |
| சித்தாந்த நூல்கள் 6 (உரை நடையுடன்) ... ... | 0—50 |
| திருவுந்தியாரும் இருபா இருபஃதும் (உரை நடையுடன்) | 0—25 |
| சங்கற்பநிராகரணம் (உரை நடையுடன்) ... ... | 0—50 |
| சித்தாந்த அட்டகம் ... ... | 1—50 |
| சித்தாந்த சைவ வினவிடை ... ... | 1—00 |
| சிவபோகசாரம் (உரையுடன்) ... ... | 2—25 |
| ஞானவரண விளக்கமும் மாபாடியமும் ... ... | 10—00 |
| செந்தமிழ்ப் பூம்பொழில் ( 2 ஆம் தொகுதி ) ... ... | 1—75 |
| ,, ( 3 ஆம் தொகுதி ) ... ... | 1—00 |
| ,, ( 4 ஆம் தொகுதி ) ... ... | 2—75 |
| ,, ( 5 ஆம் தொகுதி ) ... ... | 3—50 |
| திருநூல் ஐந்து ... ... | 0—50 |
| சந்தானசாரியர் புராணம் (குறிப்புரை) உரை நடையுடன்) | 0—50 |
| பிராசாத நான்மணிகள் ... ... | 0—50 |
| சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பா ... ... | 0—25 |
| The Development of Saivism in South India ... ... | 2—00 |
| Saiva - Siddhanda ... ... | 1—00 |
| பிரமசூத்திரம் ... ... | 1—25 |
| திருவருட்பயன் - விளக்கவுரை ... ... | 2—59 |
| சித்தாந்தத் தெளிவியல் ... ... | 3—50 |
| திருவருட்செய்தி ... ... | 5—50 |
| ஸ்ரீ புவனாம்பிகை கலைக்ஞானதீபம் ... ... | 1—25 |

## 4. இலக்கியம்

| | |
|---|---|
| காசிக் கலம்பகம் ... ... | 0—25 |
| திருக்குறள் - அறத்துப்பால் ( பரிமேலழகர் உரையுடன் ) | 1—50 |
| சச்சபுடவெண்பா ( குறிப்புரையுடன் ) ... ... | 0—50 |
| கந்தபுராணச் சுருக்கம் ... ... | 2—00 |
| கந்தபுராணத் திரட்டு ... ... | 2—00 |
| மண் சுமந்த திருவிளையாடல் ... ... | 0—30 |
| தண்டலையார் சதகம் ... ... | 0—50 |

| | ரூ. பை. |
|---|---|
| கிளிவிடு தூது | 0—25 |
| திருவருட்டுறைப் புராணம் | 1—50 |
| கந்தக்கடவுள் வாழ்த்தும் வரலாறும் | 0—25 |
| சேக்கிழார் நாயனார் புராணம் | 0—25 |
| நால்வர் நான்மணி மாலை | 0—50 |
| தருமையாதீனமும் தாயுமானவர் திருக்கோயிலும் | 0—75 |
| ஆசாரக் கோவை | 0—75 |

## 5. சமய மரபு நூல்கள்

| | |
|---|---|
| Sri Gurugnanasambandar of Dharmapuram | 1—00 |
| புட்பவிதி | 0—25 |
| குருவழிபாடு | 1—00 |
| சைவா நுட்டான அகவல் - சிவபூஜை அகவல் | 0—50 |
| சிவபூசா விதி | 1—25 |
| புட்ப பலன் ( குறிப்புரையுடன் ) | 0—25 |
| சைவானுஷ்டானவிதியும் - அனுஷ்டான அகவலும் | 0—45 |
| நித்திய கன்மநெறி | 1—50 |

## 6. யாத்திரை நூல்கள்

| | |
|---|---|
| திருக்கயிலாய யாத்திரை | 5—00 |
| அமரநாதம் | 3—00 |
| பசுபதிநாதம் | 3—00 |
| ஜோதிர்லிங்கத் தலங்கள் | 1—50 |

## 7. விழா மலர்களும் பிற நூல்களும்

| | |
|---|---|
| ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் கனகாபிஷேக விழா மலர் | 5—00 |
| புள்ளிருக்குவேளூர் மகாகும்பாபிஷேக மலர் | 14—00 |
| திருவையாறு மகாகும்பாபிஷேக மலர் | 5—00 |
| ஞானசம்பந்தம் வெள்ளிவிழா மலர் | 1—00 |
| திருவாரூர் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா மலர் ( சைவசித்தாந்தம் வினா விடை ) | 2—00 |
| திருபுவனம் மகாகும்பாபிஷேக மலர் | 3—00 |
| ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி நினைவு மலர் | 4—50 |
| பரமானுப் புராணம் | 1—25 |

---

அரிய வாய்ப்பு:— மூவர் அருளிய முதல் ஏழு தேவாரத் திருமுறைகளை (விலை மதிப்பு ரூ. 46—25). ஒருசேர வாங்குவோர்க்கு ரூ. 25—00க்குக் குறைந்த விலையில் தரப்படும். அஞ்சல் செலவு தனி. இத்தொகுதிக்குக் கழிவு இல்லை. வேளூர் கும்பாபிஷேக மலருக்கும் கழிவுத் தொகை இல்லை. குறைந்த தொகுதிகளே கையிருப்பில் உள்ளன. வாய்ப்புக்கு முந்துங்கள்.